அறைவு 04 இயம் 07 Sept 12-18, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

**IELTS FOR FOREIGN VISA**

Contact
0770203201

**HELLO MOBILE WORLD**



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை

# உள்நாட்டு விசாரணைக்கே ஆதரவு...!

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



**த**மிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், அக்கூட்டமைப்பின் பேச்சாளர் அ. சுமந்திரனும் உள்ளக விசாரணையையே ஆதரிப்பதாகத் தமக்குத் தெரிவித்திருப்பதாக அமைச்சர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலையே தாமும் இருப்பதாகத் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஹிரு செய்திப்பிரிவுக்கு வழங்கிய விசேட செவ்வியில் மனோ இதனைக் கூறியுள்ளார். 17

சர்வதேசமே!

## உள்நாட்டு விசாரணையை நிறுத்து!!!

### சர்வதேசத் தமிழ் அமைப்புக்கள் வேண்டுகோள்

**போ**ர்க்குற்ற விசாரணைகளை உள்ளகப் பொறிமுறையின் ஊடாக முன்னெடுப்பதைத் தடுக்க வேண்டும் என சர்வதேசப் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இவ்வாறு உள்ளகப் பொறிமுறையொன்றை உருவாக்குவதை விடுத்த சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகவோ 17



2013ல் நடைபெற்ற புலத்தமிழர் போராட்டம்

## இளைஞன் கொலை மைத்துனன் கைது

**க**டந்த 8ம் திகதி அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட தோப்பூர் இளைஞனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தில் குறித்த இளைஞனின் மைத்துனர் காவல்துறையினரால் கைதாகியுள்ளார்.

கைதாகிய முன்னாள இராணுவ சிப்பாயான சந்தேகநபரின் தகவல்களுக்கு அமைய அவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சிலவும் காவல் 17



முகமது இக்ராம்

## திருமலைக்கு 2 கொடகேயின் விருதுகள்



நந்தினிசேவியர் கௌரிதாசன்

**கொ**டகேயின் சாகித்திய விருதுகளைத் திருகோணமலையின் மூத்த எழுத்தாளர்கள் இருவர் வென்றுள்ளனர்.

வாழ்நாள் சாதனையாளர் விருது 17

## "திருமலை வளாகத்திற்கு நிரந்தர முதல்வர் நியமிக்கப்பட வேண்டும்"

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள்



**கி**ழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்திற்கு நிரந்தர முதல்வர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டப் பிரதம செயற்பாட்டாளர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் உரிய அதிகாரி -களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஐப்பசி மாதத்துடன் நிறைவுறும் கடந்த ஒரு வருட காலப் - பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் நிர்வாகம் நிறைவேற்று அதிகாரியொருவரின் 17

**ENGLISH**

BRITISH COUNCIL

IELTS™ is life-changing

Cambridge English
Young Learners





Results, guaranteed fast.

A/L - O/L

**VEAL BUSINESS COLLEGE**

159 A, Sea View Road, Trincomalee
026 2227622 - 0770203201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# மென்வலுவைக் காத்து நிற்கும் அரசியல் சாணக்கியம்!!!

அரசியல் சாணக்கியம் என்றால் என்ன? என்பது தொடர்பான தெளிவு எமக்கு மிகவும் தேவையாக உள்ள நிலையில் இன்று இரண்டு அரசியல் சொல்லாடல்கள் தமிழர் வாழ்வியலில் முக்கியம் பெற்றுள்ளதை நாம் காணலாம்.

அவை முறையே மென்வலு என்ற பதமும் சாணக்கியம் என்ற பதமும் ஆகும்.

மென்வலு என்றால் என்ன என்பதைத் தற்போதுள்ள அரசியல் தலைமையானது தமிழர்களின் தீர்வு தொடர்பாக எவ்வகையான அனுகுமுறையைக் கையாள முயற்சிக்கின்றது என்பதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளலாம்.

பேரினவாதச் சிந்தனையுடன் மேலோங்கியுள்ள சக்தியொன்றை எதிர்கொள்ளும் போது உச்ச விட்டுக் - கொடுப்பக்களைச் செய்து எமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் பண்பையே இங்கு நாம் மென்வலு எனக் காண்கின்றோம்.

அதாவது எந்தச் சந்தர்ப்பத்திலும் பேரினவாதமானது தமிழர்களின் மீது கோபம் கொள்ளத் தக்கவகையில் எவ்வித நடவடிக்கை - களையும் தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வைக்க முனையக் கூடாது என்பதையே அந்த மென்வலு என்ற பதம் தொக்கி நிற்கின்றது.

அதாவது பேரினவாதத் தலைமையைக் கோபம் கொள்ளச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையையும் முன்கொண்டு செல்ல முயற்சிக்க தமிழ்த் தலைமை தற்போது தயாரற்றிருப்பதையே இந்த மென்வலு காட்டிநிற்கின்றது.

மென்வலுவின் ஊடாக எதனைத் தமிழர் தரப்பு பெற முயற்சிக்கின்றது என்றால் எதனைத் தர பேரினவாதத் தரப்பு தயாராகின்றதோ அதனை அப்படியே பெற்றுக்கொள்ளவே இம் மென்வலு தற்போதைக்குத் தமிழர் தரப்பிற்குப் பயன்படப் போகின்றது.

அதாவது கட்டமைக்கப்பட்ட அழிவிற்கு உள்ளாக்கப்பட்ட தமிழனம் தனக்கு நியாயமானதை மென்வலுவின் ஊடாகப் பெற்றுக்கொள்ள எந்த ஏதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஏனெனில் தமிழினம் தனக்கு நியாயமானதைக் கேட்க முயற்சித்தால் அக் கணத்தில் பேரினவாதம் ஆத்திரமடைந்துவிடும், அதனால் மென்வலுவின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ள சமநிலையானது குழம்பி பயணித்துக்கொண்டிருக்கும் படகு கவிழ்ந்து விடும் என்ற பீதியை மென்வலுவை தமது அரசியல் பலமாக வைத்திருப்பவர்கள் தெரிவிப்பதைக் காண்கின்றோம்.

ஆதலால் நியாயமானதைக் கேட்பதை விடுத்து கிடைப்பதைக் கொண்டு தற்போதைக்கு அமைதியடைவது சிறந்தது என்பதே மென்வலுப் போக்காக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் இந்த மென்வலுப் போக்கின் பயணத்தையும் அதன் உண்மையான முகத்தையும் மக்களிடம் தோலுரித்துக் காட்டுவதற்கு அம் மென்வலுவைத் தமது ஆயுதமாகக் கொண்டிருப்பவர்கள் தயாரில்லை.

இக்கணத்தில்தான் அரசியல் சாணக்கியம் என்பது தோலுரிக்கப்படாமலிருப்பதைக் காப்பாற்றப் பயன்படுகின்றது.

சாணக்கியம் என்ற வார்த்தை சாணக்கியர் என்ற ஆலோசகரின் அர்த்தசாத்திர நூலுருவாக்கத்தின் பின்னரே தமிழில் பயன்பாட்டிற்கு வந்திருக்கும் வாய்ப்புள்ளது.

அதன்படி சாணக்கியரின் பண்பு என்ன என்பதைப் புரிந்துகொண்டால் சாணக்கியம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அறக் கோட்பாடுகளைக் களைந்துவிட்டு உலகியல் வெற்றியொன்றையே கருதி ஆட்சி முறைகளை விளக்க முற்பட்ட அறிஞரே சாணக்கியர். ஆதலால் அவரது சாணக்கியம் என்பதில் வெற்றி அடையவேண்டுமாயின் அறத்தைப் பற்ற அஞ்சத் தேவையில்லை என்பதே கற்பிக்கப்படுகின்றது. ஆகவே சாணக்கியம் என்பதில் அறம் இல்லை. அதனால் மென்வலுப்போக்கினை தோலுரிப்பதில் இருந்து தப்பிக்கொள்ளும் அறம் இறந்த சாணக்கியத்தை மென்வலுப்போக்குடையோர் கைக்கொள்ளத் தொடங்கி விட்டனர்.

அந்தச் சாணக்கியம் தான் அந்த அமைப்பிலுள்ள ஒவ்வொருவரும், ஒவ்வொரு நேரத்தில், ஒவ்வொரு மனிதரிடம், ஒவ்வொருவிதமாக ஒரே வியடத்தைப் பேச முற்படுவது.

தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் உள்ளக விசாரணை என்ற அழுத்தம் இன்று எரிகின்ற பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சனையினை அரசியல் ரீதியாக எதிர்கொள்கின்ற தமிழர்களின் தலைமையானது பின்பற்றும் சாணக்கியம் என்ன என்பதை அனைத்துத் தமிழ் மக்களும் செவ்வனே உணர்ந்துகொள்ள முடியும். ஏனெனில் உள்ளக விசாரணை தொடர்பாக அந்த அமைப்பிலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஒவ்வொரு மனிதரிடம் பேசத் தலைப்பட்டுள்ளமை அவர்களது சாணக்கியத்தை வெளிக்காட்டுகின்றது.

தர்மத்தின் வாழ்வுதன்னைக் கௌவுகின்ற சாணக்கியத்தால் அழிந்து போவது இனமொன்றாக இருக்கப்போகின்றது.... காப்பவர் யாரோ!!!

# அரச பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகள்

அரச பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதக்கீட்டில் இருந்து கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி மற்றும் கிழக்கு மாகாண உறுப்பினர் ஜெனார்த்தனன் ஆகியோர் மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்களுக்கான நிதியுதவியை மேற்கொண்டனர்.

மாகாணக் கல்வி அமைச்சர் தையல் மற்றும் அரவை எந்திரங்களையும் ஜெனார்தனன் சவர்க்கார உற்பத்திக்கான பொருட்களையும் மக்களுக்கு வழங்கினர்.





# அரசியலுக்குப் பின்னால் ஆசான்கள் செல்லக்கூடாது



அரசியல்வாதிகளுக்குப் பின்னால் அதிபர்களும் ஆசிரியகளும் செல்வதாகவே பெருமளவு முறைப்பாடுகள் தமக்குக் கிடைப்பதாக கிழக்கு மாகாண முதல்வர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நேற்று (11) மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்திய கல்வி வலயத்தின் அதிபர்கள் ஆசிரியர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இக்கருத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கிழக்கின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் நிஷாம் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் கருத்துரைத்த முதல்வர் நேர்மையாகத் தமது கடமையைச் செய்யும் கல்வியலாளர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் வாதிகளின் பின்னால் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது எனத் தெரிவித்ததுடன் இவ.வாறு செல்பவர்களினால் பயிற்றுவிக் கப்படும் மாணவர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்று கேள்வியும் எழுப்பியுள்ளார்.

அதிபர் தரமற்றவர்களை நீக்கி அதிபர் தரமுள்ள ஆனால் இன்றும் ஆசிரி - யர்களாகச் சேவையாற்றுகின்றவர்களை உடனடியாக அவர்களுக் குரிய தரங்களுக்கு நியமிக்குமாறு தான் கல்வி அமைச்சரிடம் கேட்டள்ளதாகவும் கிழக்கின் முதல்வர் தெரிவித்தார்

# திரியாயில் தேவை மதிப்பாய்வு அமர்வு பெண்கள் வலையமைப்பு நடாத்தியது



குச்சவெளி பிரதேச பெண்கள் வலையமைப்பால் திரியாய் மீள் குடியேற்றக் கிராமத்தில் தேவை மதிப்பாய்வு அமர்வொன்ற நடாத்தப்பட்டுள்ளது.

இவ்வமர்வில் திரியாய் கிராம சேவகர் பிரிவிற்கு அண்மித்த கட்டுக்குளம், கல்லம்பத்தை, மதுரங்குடா, செந்துார், கல்லறாவ மற்றும் இரணைக்கேணி, கும்புறுபிட்டி, நிலாவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் சிறுகுழு உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன், திரியாய் தமிழ் மகா வித்தியாலய அதிபர் பி.சௌந்தர்ராஜன் பங்குபற்றியிருந்தார்.

விசேடமாக இவ்வமர்வின் நெறிப்படுத்தலினை இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் மதியுரைஞர் பொ.சற்சிவானந்தம் பிரதி இணைப்பாளர் செ.கலாரதன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த இச் செயலமர்வு ஊடாக இப்பிரதேசங்களில் மிக முக்கியமாக யானைகள் நடமாட்டத்தில் ஏற்படும் பாதிப்புகள், போக்குரத்து பிரச்சினைகள், சமூர்த்தி வறுமை நிவாரண முத்திரைகள் வழங்கப்படாமை மற்றும் மீளக்குடியமர்ந்தோருக்காக வீடமைப்புகள் பலருக்கு வழங்கப்படாமை,மது மற்றும் மற்றும் போதைப்பொருள் விற்பனைகள், பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை என்பன பிரதான பிரச்சினைகளாக வெளிக்கொணரப்பட்டன.

பெண்கள் வலையமைப்பினால் அறிக்கையாக்கப்பட்டுள்ள இப்பிரச்சனைகள் உரிய அதிகாரிகளிடமும் அரசியல் வாதிகளிடமும் கையளிக்கப்படவுள்ளன. (கலா)

# தமிழரசுக் கட்சியின் கூட்டம்



இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்டக்கிளை மற்றும் மூதுார் சேருவில திருகோணமலை ஆகிய தொகுதிக்கிளை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று 08.09.2015 செவ்வாய்கிழமை மாலை 3.30 மணியளவில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மற்றும் எதிர்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் அவர்களின் இல்லத்தில் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் சி.தண்டாயுதபாணி நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அச்சுதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## ஊனமுற்றிருந்ததால் நடந்த கொலை

### தந்தையே மகனை கொன்றார்

வவுணதீவு பருத்திச்சேனை பகுதியில் கடந்த செவ்வாய் கிழமை (08.09.2015) அன்று பருத்திசேனையை சேர்ந்த 30 வயதான தாமோதரம் மகேந்திரன் என்பவரும் அவரது 07 வயதான மகன் வினோஜன் ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

பிற்பகல் நேரம் தாயார் வீட்டில் இல்லாத நேரம் தனது மகனுடைய கழுத்தில் கூரிய ஆயுதத்தினால் குத்திக் கொலை செய்து தானும் தன் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து தற்கொலை செய்தவரின் மனைவி தனது கணவனும் மகனும் உயிரிழந்ததை கண்டு தனது நான்கு மாத குழந்தையுடன் கிணற்றில் குதித்த நிலையில் அயலில் உள்ளவர்களால் காப்பாற்றப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி எம்.என்.அப்துல்லாவினால் சடலங்களை பிரேத பரிசோதனைகளுக்காக போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பணிக்கப்பட்டது.



## "சகோதர இனத்துடன் இணைந்திருப்போம்"



**சீனித்தம்பி யோகேஸ்வரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் கடந்த புதன்கிழமை சகோதர இனத்தை நாம் வெறுமனே விட்டுவிடமாட்டோம் என தெரிவித்தார். மேலும் அவர், "நாங்கள் பல உயிர் தியாகங்களை செய்து போராடிக் கொண்டிருந்தபோது சகோதர இனத்தவர்கள் பாதிக்கப்படா-மலிருந்தார்கள். ஆனால், தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு கிடைக்கும்போது சகோதர இனத்தையும் வெறுமனே நாம் விட்டுவிடப் போவதில்லை. அவர்களையும் இணைத்துக்கொண்டு செல்லவுள்ளோம். தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருந்து தமிழ் பேசும் மக்களின் தீர்வைப் பெறும் முயற்சியில் இரு இனங்களும் இணைந்து பாடுபட வேண்டும்" என்றார்.

## குளவி கொட்டியதால் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஏறாவூரில் குளவிக் கொட்டினால் பாதிக்கப்பட்ட மாணவி உயிர் இழந்துள்ளார்.

தளக்கடி கிராமத்தைச் சேர்ந்த ஜெயபாலன் வினோஜினி என்கின்ற 16 வயதான மாணவி கடந்த வியாழக்கிழமை (10.09.2015) பாடசாலை விட்டு வீடு திரும்பும் வேளையிலே காட்டுப்பகுதியில் வைத்து குளவிகள் இவரை கொட்டியுள்ளதாகவும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதும் எதுவித பலனுமின்றி உயிரிழந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

## வற்றிய நிலையில் பல நீர்நிலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக நடுத்தர நீர்ப்பாசன குளங்கள் பெருமளவில் வற்றி-விட்டதாக மாகாண நீர்ப்பாசன திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பிரதி பணிப்பாளர் எம்.வடிவேல் தெரிவித்தார். இம்மாவட்டத்தில் 14 நடுத்தர நீர்ப்பாசன குளங்கள் உள்ளன. இவற்றில் மதுரங்கேணி பெரிய குளம், மகிழடித்தீவு குளம், பழுகாமம் குளம், சேவகப்பற்று குளம், போரதீவு குளம் மற்றும் மகிழூர் குளம் ஆகிய குளங்கள் முற்றாக வற்றிவிட்டன. கடுக்காமுனை குளம் தற்போது 5அடி தண்ணீரை மாத்திரமே கொண்டுள்ளது.

இதேவேளை, புழுகுணாவ, அடைச்சகல் போன்ற குளங்களும் பெருமளவில் வற்றிவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். குறித்த குளப்பிரதேசங்கள் வரட்சி காரணமாக பெரிதும் வரண்டு காணப்படுவதுடன் வயல் நிலங்களும் வரண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உணவு விற்பனை நிலையங்கள் சுற்றிவளைப்பு



மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசத்தில் பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களை விற்பனை செய்ததாகக் கூறப்படும் ஐந்து வர்த்தகர்கள் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து 06 நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பாவனைக்குதவாத உணவுப்பொருட்களையும் அசுத்தமான சமையல் பாத்திரங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபை பிரதான பொதுச் சுகாதார பரிசோதகர் நேசதுரை தேவநேசன் அவர்கள் தெரிவித்தார்.

சுமார் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பாவனைக்குதவாத உணவுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அவர் கூறினார்.

## இலவச கையேடுகள் வழங்கி வைப்பு




மட்டக்களப்பு கல்வி வலய அலுவலகம் மற்றும் மட்டக்களப்பு கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பிரதி கல்வி பணிப்பாளர் சசிந்திர சிவகுமார் (திட்டமிடல்) தலைமையில் க.பொ.த. சாதாரண கணித பாட மாணவர்களுக்கான கணித பாட செயலேடு வழங்கும் நிகழ்வு 10.09.2015 மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் இடம்பெற்றது இக்கையேட்டினை யாழ் இந்துகல்லூரியின் 1992ம் ஆண்டு உயர்தர பழைய மாணவர்களின் அனுசரணையில் சுமார் 1170 மட்டக்களப்பு கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு மாணவர்-களின் கணித பாடத்தினை மேம்படுத்தும் நோக்கில் இக்கையேட்டினை இலவசமாக வழங்கி உள்ளனர்.

## நுளம்பு ஒழிப்பு வாரத்தை இட்டு கடும் பரிசோதனைகள்

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கடந்த வியாழக்கிழமை வீடுகள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டிடங்கள் என்பன பரிசோதனை செய்யப்பட்டதுடன் டெங்கு நுளம்பு பெருகும் நிலையில் இருந்த உரிமையாளர் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ரீ.எம்.நஜீப்கான் தெரிவித்தார்.

சுகாதர அமைச்சின் கீழ் இயங்கும் டெங்கு ஒழிப்பு பிரிவினால் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவு டெங்கு தீவிரப் பிரிவாக பிரகடனப்படுத்தப்பட்டு இந்த வாரத்தில் நான்கு நாட்கள் தங்களது பிரதேசத்திலுள்ள அனைத்து இடங்களையும் பரிசோதனை செய்யுமாறு பணிக்கப்பட்டதற்கிணங்க இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



பார்வையிட்ட வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய வகையில் பொருட்களை வைத்திருந்தவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் அவர்கள் நுளம்பு பெருகக் கூடிய வகையில் தங்களது சுற்றுச் சூழலை வைத்திருப்பார்கள் என்றால் அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## கைகலப்பு முற்றியதால் விபரீதம்



கணவன் மனைவிக்கிடையிலான கைகலப்பில் மனைவி கத்தியால் குத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்தில் மரணம் அடைந்திருந்தார். சம்பவத்தின் போது மனைவியை கணவன் கத்தியால் குத்திய அதேவேளை தனக்குத் தானேயும் குத்தியுள்ளார்.

தனது சொந்த ஊரான கிளிநொச்சிக்கு சென்றுவிடுவோம் என பலமுறை கேட்டிருந்தும் மனைவி அதற்கு சம்மதம் அளிக்காத நிலையில் வாக்குவாதம் முற்றியே கைகலப்பு ஏற்பட்டதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் கடந்த ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் மேற்கொண்ட ஆய்வு மூலமே தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார். இம்மாகாணத்தில் முஸ்லிம் பாடசாலைகளை விட தமிழ்ப் பாடசாலைகள் கூடுதலாக காணப்படுகின்ற போதிலும், தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்ப தலைவர்கள் இல்லாமை, பிள்ளைகளை பெற்றுக்கொள்வதில் ஆர்வமின்மை, குடும்பக்கட்டுப்பாடு உள்ளிட்டவைகளே பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கு காரணமெனவும் அவர் கூறினார்.

## புதையல் தோண்ட சென்றோர் கைது

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலைப் பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முற்பட்டதாகக் கூறப்படும் மூன்று பேரை கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர். 06 பேரைக் கொண்ட குழுவினர் புதையல் தோண்டுவதற்காக கொக்கட்டிச்சோலை காட்டுப்பகுதிக்கு சென்றமையை அவதானித்த பொதுமக்கள், வழங்கிய தகவலை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் இவர்களைத் தவிர இன்னும் மூன்று பேர் தப்பிச்சென்றுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# களவு வழக்கில் ஜெயக்குமாரி கைதாகி விடுதலை??



விடுதலைப் புலிகளை மீள உருவாக்கும் முயற்சிக்கு உறுதுணையளித்தார் என்ற ஆரம்பக் குற்றச்சாட்டில் கைதாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தமிழ்ப் பற்றாளர் ஜெயக்குமாரியை களவு வழக்கொன்றில் நீதிமன்றத்தால் பிணையளிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம், கெப்பிற்கொல்லாவைப் பிரதேசத்தில் நிகழ்ந்த திருட்டு தொடர்பாகவே ஜெயக்குமாரியைக் காவல்துறையினர் கைது செய்திருந்தனர். குறித்த திருட்டு சம்பந்தமான நீதிமன்ற அழைப்பாணை ஜெயக்குமாரிக்குச் சென்றடையாததையிட்டே அவர் கைது செய்யப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரைக் கைது செய்த சிறையில் வைத்திருக்க வேண்டும் என காவல்துறை கேட்டுக்கொண்ட போதும் நீதிமன்றம் அவருக்குக் குறித்த வழக்கில் பிணை வழங்கியுள்ளது.

ஜெயக்குமாரி உவ்வொரு மாதமும் காவல்துறை அலுவலகத்தில் தனது கையொப்பத்தை இட்டுவரும் நிலையில் நீதிமன்ற அழைப்பாணை அவருக்கு எவ்வாறு கிடைக்காமல் போனது என்பது தெரியவில்லை.

2014 ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஜெயக்குமாரியும் அவரது 13 வயதுமகளான விபூசிகாவும் குற்றப்புலனாய்வுக் காவல்துறையால் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிருபிக்கப்படாமல் 362 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலேந்திரன் ஜெயகுமாரி கடந்த மார்ச் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் இணைவதற்கு அழைப்பு

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் ஸலங்கா அரசையும் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

202ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற உடன்படிக்கைக்கு அமைவாக ஒழுங்கமைந்து நடக்க அப்போது ஆட்சிக்கட்டில் இருந்த ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு விரும்பவில்லை.

தற்போது இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரிகளால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உயர்ந்த செல்நெறிகளை நோக்கிய பயணத்தில் சர்வதேசத்துடன் இணைந்து பயணிப்பதற்கும், இலங்கையின் கடந்த கால வன்முறை சார் வரலாற்றுத் தடத்திலிருந்து வெளியில் வந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்கான சமிக்ஞையை இலங்கையருக்கு மட்டுமன்றி, சர்வதேசத் தவருக்கும் வெளிப்படுத்துவதற்கும் இந்த இணைவு உறுதுணையாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான ஒரு நடவடிக்கையின் மூலமாக இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக சிதைந்து போய் இருக்கும் இன நல்லிண- க்கத்தையும் தெளிவான முறையில் மீளக் கட்டியெழுப்ப முடியும் என்று சர்வதேச நீதிமன்றக் கட்டமைப்பின் ஆசிய-பசுபிக் பிராந்திய அதிகாரி அமியெல் டெல் ரொசாரியோ வலியுறுத்தியுள்ளார்.

# சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

திருகோணமலை மாவட்டம் மூதூரில் நடைபெற்ற தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் பதினேழுபேரின் கொலைகள் உட்பட பதினாறு கொலைச்சம்பவங்களுக்கான சனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியினுள் இடம்பெற்ற 16 கொலை சம்பவங்கள் தொடர்பில் ஆராய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால், 2006இல் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக ஆராய 2013இல் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகளை நாடாளுமன்றில் முன்வைக்க அரசாங்கம் தயாராகியுள்ளது.

முதலாவது விசேட ஜனாதிபதி ஆணைக்குழு உதலாகம என்ற பெயரிலும், இரண்டாவது ஆணைக்குழு மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு என்ற பெயரிலும் பிரசித்தமானது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்'மன் கதிர்காமர் கொலை, மூதூரில் இடம்பெற்ற 17 நிவாரண பணியாளர்களின் கொலை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை, கெப்பெற்றிகொல்லாவ 68 சாதாரண பொதுமக்கள்



கொலை, திகம்பத்தன பாதுகாப்பு பிரிவின் 98 பேரது கொலை என்பன அதில் அடங்குகின்றன.

இதேவேளை, இறுதி யுத்தத்தின் போது சர்வதேச மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதா? என்பது தொடர்பில் ஆராயும் பொறுப்பு கடந்த 2013ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இவ்வறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது..

# சமஸ்டிக் கோரிக்கையுடன் சம்பந்தன் செயலாற்ற முடியாது – அரசு

சமஸ்டியை பெறும் நிகழ்ச்சிநிரலுடன் எதிர்கட்சித் தலைவராக இரா. சம்பந்தனால் செயற்பட முடியாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித மானப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார்.

ஹிரு தொலைகாட்சியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இரா.சம்பந்தனால் தன்னிச்சையான நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் செயற்பட முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்க

## கபே அமைப்பு வேண்டுகோள்

குற்றஞ்சுமத்தப்படாது சிறைத்தண்டனை அனுபவிக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு) மற்றும் இலங்கை மனித உரிமைகள் நிலையம் ஆகியன ஒன்றிணைந்து இந்த கோரிக்கையை விடுத்துள்ளன.

ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஊயகுகுரு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக சிறைதண்டனை அனுபவிக்கும் அரசியல் கைதிகள் தொடர்பில் ஆராய்ந்து அவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அந்த அறிக்கையினூடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி


இலங்கை ரூபாவின் மதிப்பு குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக வாகனங்களின் விலைகள் உட்பட இறக்குமதி பொருட்களுக்கான விலைகள் அனைத்தும் அதிகரிக்க கூடிய நிலைமை காணக்கூடியதாகவும் மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகிவற்றிலிருந்து கடனுதவிகள் மற்றும் நன்கொடைகள் கிடைக்காததால் ரூபாவின் மதிப்பிறக்கம் நிகழ்வதாக தெரிகின்றது.

அதேவேளை இலங்கை மீன்களுக்கான ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தமை, அமைச்சர்களின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டமை, தற்போதுள்ள 9 றில்லியன் கடன்களால் எழுந்துள்ள சுமை ஆகியனவும் பெமதி இறக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.

ரூபாவின் மதிப்பிறக்கத்தால் யூரோ, பவுண்டஸ், அமெரிக்க டொலர் ஆகியவற்றின் பெறுமதி இலங்கையில் அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரிக்க கூடிய ஆபத்து இருப்பதாகவும் பொருளியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு MALAIMURASU உலகச் செய்திகள்

## புனித மக்காவில் விபத்து

முஸ்லிம்களின் புனிதத் தலமான மக்காவில் ஏற்பட்ட விபத்தில் அறுபத்தைந்து பேர் பலியாகியுள்ளனர். பாரந்தூக்கியொன்று சரிந்து வீழ்ந்ததால் இவ்விபத்து ஏற்பட்டஉள்ளது.

சரிந்த பாரந்தூக்கி புனிதக் கோவிலின் மூன்றாம் மாடி மீது விழ்ந்ததாகத் தெரிவித்துள்ள மக்கள் விபத்தில் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்தபகுதியில் கட்டுமாண நடவடிக்கைகள் முனனெடுக்கப்பட்டிருந்ததாகவும் விபத்து நடந் வேளையில் 'மக்கள் தொழுகைக்காக அக் கட்டிடத்தினுள் இருந்ததாகவும் அங்கிருக்கும் அல்ஜசீரா செய்தியாளர் தெரிவித்துள்ளார்.



## ஜப்பானில் கடும் வெள்ளம்

வடகிழக்கு ஜப்பானில் கடும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

தலைநகர் டோக்கியோவின் சில பகுதிகளும் இதனால் பதிக்கப்பட்டுள்ளன.இதனால் சுமார் 90 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி இருந்த 100க்கும் அதிகமானவர்கள் உலங்கு வானூர்திகளின் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

எனினும் எட்டு பேர் இன்னும் காணாமல் போய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அமெரிக்கா, நேட்டோவின் கண்டனங்கள் புறக்கணிப்பு – ரஸ்ய ஆயுதங்கள் சிரியாவிற்குள்

சிவடகரிய நாட்டுக்குத் தமது ஆயுத வினியோகம் தடையின்றி நிகழும் என இரஸ்யாவின் வெளிளிவகார அமைச்சர் அறிவித்துள்ளார்.

சிரியாவில் அரச படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டைகளை அடுத்து இரு தரப்பிற்கும் சர்வதேச நாடுகள் இரண்டு பிரிவாகி ஆயுதங்களை வினியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அரச ஆதரவுத்துருப்பினருக்கு உள்ளநாட்டுக்கலவரத்தின் ஆரம்பம் முதலே இரஸ்யா தங்குதடையற்ற ஆயுத வினியோகங்களை மேற்கொண்டு வருகின்றது. இதனையடுத்து அண்மையில் அமெரிக்காவும் அமெரிக்காவின் தலைமையில் இயங்கும் நேட்டோ இராணுவக் கூட்டும் இரஸ்யாவை நோக்கி எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தன.

அவ் எச்சரிக்கையில் சிரியாவில் இரஸ்யா தனது இராணுவப் பிரசன்னத்தை அதிகரித்து வருவதாகவும் அவ்வாறு அதிகரிப்பது உலக சமநிலையைப் பாதிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.




எனினும் இவ்வெச்சரிக்கையைப் புறக்கணித்துள்ள இரஸ்ய வெளியுறவு அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் அனைத்து நாடுகளும் சிரிய அரசபடைகளுக்கு உதவி வழங்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அனைத்து நாடுகளும் சிரிய அரச படைகளுக்கு உதவுவதன் ஊடாக ஐஎஸ்ஐஎல் தீவிர வாதிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## சாகும் உரிமையை மறுத்த பிரித்தானியா

மனிதர்கள் தாமாகவே முன்வந்து சாக விரும்பினால் அதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானிய நாடாளுமன்றம் நிராகரித்துள்ளது.

சுகப்படுத்த முடியாத நோயினால் அடுத்த ஆறு முாதங்களுக்குள் இறந்து விடும் நிலையிலுள்ள இடருரும் நோயாளிகளுக்கு விசமருந்துகளைச் செலுத்தி அவர்கிள்ன விருப்பத்திற்கு ஏற்பச் சாக அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பிரித்தானிய நாடாளுமன்றில் சட்டமூலமொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.



இதற்கான வாக்கெடுப்பு நடைபற்ற போது இக்கோரிக்கைக்கு அதரவாக 118 வாக்குகளும் எதிராக 330 வாக்குகளும் அளிக்கப்பட்டதால் பிரெரணை தோல்வியடைந்தது.

பிரதமர் டேவிட் கமரூன் இப்பிரேரணைக்கு எதிராகத் தனது வாக்கையிடப்போவதாக முன்னரே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வன்புணர்வு வழக்கிற்கு சவூதி அரசு ஆதரவளிக்க வேண்டும் – இந்தியா கோரிக்கை


இந்தியாவிலுள்ள சவூதித் தூதரக அதிகாரிகள் ஐம்பது வயதான நேபாளியத் தாயும் அவரது முப்பது வயதான மகள் ஆகிய இருவரையும் பட்டினி போட்டு வன்புணர்விற்கு உட்படுத்திய வழக்கு விசாரணைகளுக்கு சவூதி அரசு ஒத்துழைக்க வேண்டும் என இந்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல மாதங்களாகத் தொடர்ந்த இந்த நடவடிக்கையானது கடந்தவாரம் வெளியானதைத் தொடர்ந்து இருவரும்



காவல்துறையால் மீட்கப்பட்டுள்ளனர். தாம் ஒவ்வொரு நாளும் வன்புணரப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நாவில் பாலஸ்தீன கொடி



ஐ.நா. கட்டடத்திற்கு வெளியில், பாலஸ்தீனத்தின் கொடியையும் பறக்க விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஐ.நா. கட்டடத்திற்கு வெளியே ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் கொடிகள் பறக்க விடப்படும். இந்நிலையில், அங்கு பாலஸ்தீனத்தின் கொடியையும் பறக்க விடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் இதற்கான வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.


பாலஸ்தீனியர்கள் இது வரலாற்று ரீதியான வாக்கெடுப்பு என குறிப்பிட்டுள்ளதோடு இதனை வரவேற்றுள்ளனர்.

## ஜேர்மன்-டென்மார்க் போக்குவரத்து தடை

எல்லைப் பகுதியில் ஆயிரக்கணக்கான புலம்பெயர்வோரை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியிருந்த நிலையில் ஜேர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருவழி தொடருந்துச் சேவைகள் காலவரையறையின்றி நிறுத்தப்பட்டுள்ளது.

தொடருந்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட புலம்பெயர்வோர் சிலர் வடக்கு ஐரோப்பா நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்ததை அடுத்து இரண்டு நாடுகளுக்கு இடையிலான நெடுஞ்சாலையையும் டென்மார்க் மூடியுள்ளது.

இந்நிலையில் ஒன்றிணைந்த பங்கீடு அடிப்படையில் மேலதிகமாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் புலம்பெயர்ந்தோரை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்வது தொடர்பான முன்மொழிவை



ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

**–கால காலமாய்**
**காற்று வெளி எங்கும்**
**ஒரு**
**பறவை அலைகிறது**
**நிரந்தரமாய் குடியிருக்க**
**ஒரு கூடு தேடி –**


**– பிரபஞ்சப் பிரியன் –**

# வீணையடி நீ எனக்கு...

32



**– கவிஞர் வி.மைக்கல் கொலின்–**



கடிதத்தை எழுதி முடித்ததும் அதனை உடனடியாக விமலாவின் முகவரிக்கு அனுப்பி விட்டு வந்து கட்டிலில் அமரவும் தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

அந்தக் கடிதத்தை வாசித்ததில் இருந்து நிவேதா மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருந்தாள். பல்கலைக்கழக இறுதி வருட பரீட்சைகள் அனைத்தும் முடிவடைந்து நண்பர்களிடமும் கண்ணீர் மல்க விடைபெற்று திருமலை வந்து சேரும் வரையும் ரதன் நிவேதாவுடன் அதிகம் கதைக்கவில்லை.

வழமையாக பல்கலைகழக விடுமுறைகளில் அவர்கள் ஊருக்குப் போகும் போது இருக்கும் அந்த வழமையான கலகலப்பு அன்றில்லை.

தனது புறக்கணிப்புகள் ரதனை வெகுவாக பாதித்து இருக்கிறது என்பது நிவேதாவுக்கு புரிந்தது. தான் விலகி செல்லச் செல்ல அவன் தன் எஜமானின் காலைச் சுற்றிச் சுற்றி வரும் நாய்க் குட்டியைப் போல தேடித் தேடி வந்ததையும் தான் விலகிப் போனதையும் நினைத்துப் பார்த்தாள்.

விமலாவின் காதலுக்கு உதவ வேண்டும் என்ற நினைப்பில் தான் ரதனின் மனசைப் புண்ணாக்கி விட்டதை நினைக்க ரதனைக் கட்டிக் கொண்டு அவனது மடியில் தலை சாய்த்து அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு.......

அவர்கள் வந்த பஸ் திருகோணமலைக்கு வந்து சேர்ந்தது, ரதனும், நிவேதாவும் இறங்கிக் கொண்டதும்..... வழமையைப் போலவே அவன் அவளை வீட்டில் விடுவதற்காக அவளுடன் கூடவே வந்தான். ஆனால் ரதனாக வாய்திறந்து ஒன்றுமே கதைக்கவில்லை. நிவேதா கேட்ட சில கேள்விகளுக்கு 'ஆம்' 'இல்லை' என்ற ரீதியில் பதிலளித்து விட்டு பேசாமல் இருந்து விட்டான். உண்மையிலேயே அவன் தன்னை வெறுக்கத் தொடங்கி விட்டானோ என்று நினைக்கவே நிவேதாவுக்கு பயமாக இருந்தது. தான் செய்ய நினைத்த காரியமும் கைகூடாத நிலையில் தனது வாழ்க்கையையே பாழாக்கி விட்டேனோ என்ற எண்ணம் அவளுக்குள் எழுந்தது.

ரதன் ஏதோ வந்தோம் போனோம் என்ற நிலையில் நிவேதாவிடமும் அவளது மாமியிடமும் விடைபெற்றுக் கொண்டு சென்ற பின்னர் தான் நிவேதவிடம் அவளது மாமி "நிவேதா இன்று உனக்கொரு கடிதம் வந்தது" என்றபடி அந்த கடிதத்தைக் கொடுத்தார்.

அதில் முகவரி எழுதப்பட்டதைப் பார்த்ததுமே நிவேதாவுக்கு அது விமலாவினுடைய கையெழுத்து என்று புரிந்து விட்டது. நெஞ்சு படபடக்க அந்த கடிதக்கவரை உடைத்து வாசிக்கத் தொடங்கினாள்.

**அன்புடன் நிவேதாவுக்கு.....!**

**எனது மனப் பூர்வமான வாழ்த்துக்கள். என்ன வாழ்த்து தெரிவிக்கிறேன் என்று யோசிக்கிறீர்களா........? ஆம் உங்களது இனிமையான குடும்ப வாழ்வுக்கே எனது வாழ்த்துக்கள். காதலிப்பது ஒரு சுகம். அந்த காதல் வெற்றியடைந்து திருமணத்தில் காதலர்கள் கூடுவது அதைவிட சுகம். அந்த சுகம் உங்களுக்கு கிடைக்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.**

**அதற்கு முன்னர், உங்களிடம் நான் மன்னிப்பு கேட்க வேண்டியுள்ளது. எனக்கு தெரியாமலேயே உங்களை நேசிக்கும். நீங்கள் நேசிக்கும் ரதனை நானும் காதலித்தது குற்றம் தான். ஆனால் இது தெரியாமலேயே நடந்தது. கால தாமதம் காதலுக்கு விரோதி என்று ஒரு கவிஞன் சொன்னான். நான் இன்று அதனை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டேன். எனது காதலை எனக்குள் பூட்டி வைத்ததும் அதனை தெரியப் படுத்த முயற்சிக்காததும் எனது தவறே. அப்படி நான் எனது காதலை முன்னரே வெளிப்படுத்தியிருந்தால் இந்தளவுக்கு சிக்கல் வந்திருக்காது என்றே நம்புகிறேன்.**

**ஆனாலும் பரவாயில்லை எனது மனதை நான் தேற்றிக்கொண்டேன். ரதனின் கடிதம் எனக்கு பல உண்மைகளை புலப்படுத்தியது. என்னை காதலியாக இல்லாவிட்டாலும் நல்ல நண்பியாகவாவது ஏற்றுக்கொண்ட ரதனை நான் மதிக்கிறேன்.**

**நல்ல வேளையாக தங்கள் வாழ்கையில் குறுக்கிட இருந்த நான் அந்தத் தவறை செய்யாமல் தடுக்கப்பட்டதற்கு ரதனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.**

**நிவேதாக்கா உங்களுக்கு நல்லதொரு வாழ்க்கை கிடைத்திருக்கிறது. மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.**

ரதனை சுகம் விசாரித்ததாகக் கூறுங்கள்

அன்புடன்
- விமலா -

அந்தக் கடிதத்தை படித்ததிலிருந்து எப்போது ரதனைப் பார்ப்போம் என்றிருந்தது நிவேதாவுக்கு. தான் எத்தனை தூரம் விலகி விலகிப் போனாலும் ரதன் தன்மேல் கொண்ட காதலின் காரணமாக நெருங்கி நெருங்கி வந்ததும்.... கடைசியில் தனக்கே தெரியாமல் விமலாவுக்கு தமது காதலைத் தெரியப்படுத்தி அவன் கடிதம் எழுதியிருந்ததும், அது கூட தனக்கு தெரியாமல் செய்திருந்ததும் அப்படியிருந்தும் கூட அவனை தான் தவிர்த்து வந்ததையும் நினைக்க நினைக்க அவளுக்கு வேதனையாக இருந்தது.

ஆனால் தற்போது ரதன் கூட தன்னிடம் விலகி நடப்பதை அவள் உணர்ந்திருந்தாள். அன்று பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் நடந்த சம்பவத்திற்கு பின்னர் அவனாகவே தன்னிடம் இருந்து ஒதுங்குவது அவளுக்கு தெரிந்தது. மாலை எப்படியாவது ரதனைச் சந்திப்பது என்ற முடிவுடன் குளியலறைக்குள் நுழைந்தாள் நிவேதா.

திரைப்படம் ஓடியதைப் போல மனசில் ஓடிய சிந்தனைகள் தடைப்பட்டு சிலிர்த்துக் கொண்டான் ரதன். அவன் கால்களை நனைத்து விட்டுச் சென்ற அலைகள் மீண்டும் மீண்டும்....... கரையை நோக்கி வந்து அவனது கால்களை முத்தமிட்டன.

மெல்ல மெல்ல இருள் கவ்வத் தொடங்கியது. கடற்கரைக்கு வந்திருந்தவர்களில்...... ஒவ்வொருவராக புறப்பட்டுக்கொண்டிருந்தனர்.

நிவேதாவைப் பற்றி நினைக்க நினைக்க ரதனின் உள்ளம் ஆத்திரப்பட்டாலும் கூட அவள் மேல் ஒரு மூலையில் அனுதாபமும் இருந்தது. எவ்வளவுதான் ஆண்கள் ஆத்திரப்பட்டாலும் அன்பு செய்வதில் அவர்கள் பெண்களை விட சிறந்தவர்கள் அல்லவா...? என்னதான் மனசு அவள் மேல் சீற்றம் கொண்டாலும் அந்தக் காதல் அனுபவங்கள்....... ஒருவர் மடியில் ஒருவர் தலை சாய்த்து கலந்திருந்த அனுபவங்கள் காதலில் கூட போட்டி போட்டு காதலித்த நாட்கள்....... இன்று எல்லாம் வெறும் கனவாகிப் போயினவோ................?

நிவேதாவுக்கு நடந்த அந்த விபத்துக்குப் பிறகே அவள் தன்னிடம் இருந்து ஒதுங்கத் தொடங்கியது அவனுக்குப் புரிந்தது. தான் எந்த சூழ்நிலையிலும் அவளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாலும் அவள் தனக்குள்ளேயே சில கேள்விகளை எழுப்பிக் கொண்டு

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

அதற்கு விடை தெரியாமல் அவதிப்பட்டதும் அவனுக்குத் தெரிந்தது.

தூரத்தே திருக்கோனேஸ்வர ஆலய மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தது. மனசோ தான் படித்த கவிஞர் தேவதச்சனின் கவிதை வரி ஒன்றை அசைபோட்டது.

**அவரவர் கைமணலைத்**
**துழாவிக் கொண்டிருதோம்.**
**எவரெவர் கைமணலோ.**
**இவை என்றேன் .**
**ஆம் எவரெவர் கைமணலோ இவை என்றான்.**
**பிறகு**
**மணலை கை கழுவி விட்டு-**
**எங்கோ சென்றோம்**

மேலோட்டமாக பார்க்கையில் கைமணல் என்பது பேச்சு வாக்கில் எம் கைகள் அளைந்து கொண்டிருக்கும் மணலைக் குறித்தாலும் அது நம் வாழ்வின் சொத்து சுகங்களையும், நம் வாழ்வின் ஏனை அனுபவங்களையும் இன்னும் ஆழத்தில் வாழ்க்கைப் பிரக்ஞை முழுவதையும் குறித்து நிற்கும் அந்தக் கவிதையைப் பற்றி நினைத்தபடியே தற்செயலாக திரும்பியவன் தூரத்தில் நிவேதாவைப் போல் ஒரு பெண் வருவதைக் கண்டு உற்றுப்பார்த்தான்.

சந்தேகமே இல்லை அது நிவேதாதான். எப்படியோ தான் கடற்கரைக்கு வந்திருப்பதை அறிந்து கொண்டு தன்னை தேடி வருகிறாள் என்பது அவனுக்குத் தெரிந்தது.

நிவேதா அவனுக்கு அருகில் வரவர அவனது முகத்தில் தெரிந்த அந்த புன்னகை அவனுக்குள்ளும் புது ரத்தத்தை பாய்ச்சியது.

நீண்ட நாள் பிரிவு அல்லவா....... அது......?

ஆம்

காதலர்களுக்கு சில நிமிட பிரிவு கூட பல கால பிரிவல்லவா .........?

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவல் விரைவில் நூலுருவில் வெளிவர உள்ளது. அந்நூலில் தங்களின் மனப்பதிவுகள் வரவிரும்பின் மலைமுரசு அலுலகத்திற்கு தங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## தொடரும் தவிப்புக்கள்

இந்த வாழ்க்கையை
சங்கடங்களின்றி
நடத்த முடியவில்லை
விடியலின் ஆதியிலும்
இரவின் அந்தத்திலும்
அவை மீண்டும் கொண்டுதான்
வருகின்றன

தேநீரில் இனிப்பு
குறையும் போது

சாயமிழந்த ஆடைகளை
அணியும் போதும்

நீரில்லா கழிவறையினுள்ளும்
பொருத்தமற்ற
உள்ளாடைகளோடும்

ஒவ்வொரு சோதனைச் சாவடியின்
அடையாள வகுப்பின் போதும்
சுற்றி வளைப்புக்குள்ளும்

சில வார்த்தைகளுடாக
சங்கடங்கள்
திரண்டு கொண்டுதான்
வருகின்றன

சில வேளைகளில்
பயங்கரமான சகஜமான
மௌனத்தினூடாக.



தில்லைநாதன் பவித்திரன்

## நட்பு

இதயம் கொடுத்து
உயர்
கேட்கும் காதல்
எனக்கு
தேவையில்லை
ஆனால்
உயர் கொடுத்து
இதயம்
கேட்கும் நட்பு
எனக்கு
என்றும் அவசியம்.

முகமட் சாதீர்
கிண்ணியா

## அவள் கொலுசு



ஆயிரம் விண்மீன் ஒளியை
அடைத்துக் கொலுசென அணிந்து
வருகிறாள்...!

என்னையும் கொலுசின் மணியாகக்
கைப்பற்றித் தொங்க விடுகிறாள்...!

தூரத்தில் வருவதை முன்கூட்டியே
கொலுசு வழியே சொல்லி
விடுகிறாள்...!

நான் அதில் மயங்குவேன் என்று
சொல்ல மறந்திட்டாள்...!


என்னைப் பிரிகையில் அவள்
கொலுசின் ஒலி மட்டும் விட்டுச்
செல்கிறாள்...!

விழுந்த கொலுசின் மணி போல
என் நினைவு சிதற வைக்கிறாள்...!

## இது காதலா ?

[[ரகு]]

இதழ்களை மூடிக் கொண்டு
விழிகளால் பேசும்
வித்தையையாரிடம் கற்றுக்
கொண்டாய்?
உன் விழிகளின் ஆழத்தில்
புதைத்து விட்டேன்..
முயற்சு செய்கிறேன்மீண்டு
வரவல்ல இன்னும்
ஆழமாக புதைந்து விட...



## இதுவா?

கல்லெறி விழுமேல்-அதுவோர்
காய்க்கின்ற மரந்தான்!
கல்லெறி பெறினும்-அதுதான்
காய் பழம் தருந்தான்!

காய்த்திடு மரங்கள்-அதிகம்
கண்டிடல் அரிதாம்!
காய்த்திடாதவை-சுவைக்
கனிகளும் வழங்கா!

நற்கனி சுவைத்தோர்-மரத்தின்
நலத்தைப்பாராரோ?
கற்களைத் தானோ-பரிசாய்க்
கைகளாலளிப்பார்?

நன்றி மறப்பாரோ?-அடடா,
நல்வழி செல்லாரோ?
வென்றிடுதல் மரமோ?-சீச்சீ,
வீரம் எனல் இதுவோ?

'தாமரைத்தீவான்'
(ஈச்சந்தீவு-கிண்ணியா)

## ஓ மழையே!

மழைத்துளி மண்ணை முத்தமிட
மழைச்சாரலில் தேகம்
நனைந்த இளம் ரோஜாவாக
என்னருகில் நின்றவளே!

என்னைப் பற்றி- என்ன நினைத்தாயோ!
உன் மனதில் -காதல்பார்வையினாலே
புண்ணகை தூவிவிட்டு அவ்விடத்தில்
என்னை தவிக்க விட்டு எங்கே
சென்றாயடி!

மழைக்காலங்கள் மாறிமாறி வந்து
போகின்றன என் கண்கள்
இன்னும் உன் காலடி தடத்தினையே
தேடிடுதே!

(ஸ்ரீ கயல்)

## சொல்லாத காதல்

பா. ஆசைத்தம்பி

ஒரு
முன் பனிக் காலத்தில்
பின் பனி வேளையில்
குளிரின் குறும்பினால்
மார்பின் குறுக்கே
கைகளைக் கட்டிக்கொண்டு
ஜன்னலில் அமர்ந்திருக்கிறது
நிலா !



உனக்காக என்னால்
ஆயிரம் கவிதைகள்
எழுத முடியும்...
ஆனால்
எழுதாத பக்கங்களில்தான்
என் காதல்
ஜீவனோடிருக்கிறது!

என் சொல்லாத காதலினை
சொல்லத் துடிக்கும்
மௌனத்தினை
சொல்லிவிடத் துணிந்து நான்
வார்த்தைகளைத் தேடுகிறேன்

தலைக்கனம் பிடித்த தமிழ்
தலைதெறிக்க ஓடுகிறது!
தலைக்கனம் பிடித்த தமிழ்
தலைதெறிக்க ஓடுகிறது!

## "நீ இல்லாத பொழுது"

இரயிலோடிப் போன பின்னும்
தண்டவாளம் அதிர்வது போல
திரும்பி நீ சென்றாய் தெரியாதவன்
போல.... எனது இதயம்
அதிர்ந்து துடிக்கிறதே!
அலையடித்து மீண்டாலும்
கரையில் ஈரம் இருப்பது போல்
பிரிந்து நீ சென்றாய் பிறத்தி ஒருத்தி
போல்...
நினைவீரம் மனதை விட்டு
வடிய மறுக்கிறதே!



நிலவு முழுதாய் இருக்கும்
பௌர்ணமியை விட... முழுதாய்
நிலவு மறைந்திருக்கும்
அமாவாசை... நிலவு பற்றி
நிலவினது தேவை பற்றி அதிகம்
நினைக்க வைத்தல் போல் நீ...
தொலைந்த வெற்றிடமாய் இருள்
சூழ்ந்த நகரின் பகல்...

நினது நினைவை மட்டும்
கிளறிடுதே! கனவு கலைந்தாலும்
அதில் வந்த சம்பவங்கள்
மனதில் பல நேரம் மறையா
திருப்பது போல் நினது மறைவு
நிரந்தரமென்று றுணர்ந்த பின்னும்
நினது நினைவுகளென்
மனஇரணத்தைச் சீண்டிடுதே!

த. ஜெயசீலன்

## என்னவள் அவளே தான்



பள்ளத்தோட்டம் சஜீ

மெல்லிய கவியவள்!
தெளிந்த நீரவள்!

சினுங்கும் காற்றவள்!
மினுங்கும்
பொன்னவள்!

வளர்ந்த செடியவள்
இடை மெலிந்த கொடியவள்

உதிர்ந்த பூவவள்!
தெலைத்த புதையலவள்!

பூவிற்கு மூத்தவள் அவள்!
புதையலுக்கு தங்கை

மானுக்கு மகள் அவள்-விழி
மீனுக்கு நிகரவள்!
என்றும் என் பூமகள்!

## ஒரு தலை காதல்

காதலுக்காக நீயும்
இல்லை உன்னை
காதலிக்காமல்
நானும் இல்லை
ஏனோ மறுக்கிறது
என் மனம்

இது வேண்டாம்
என்று தினம் தினம்
பார்வையால் பரிசளித்தது
உன் கண்கள்
புன்னகையை
மறுத்ததில்லை
உன் உதடுகள்
நீ பேச காத்திருக்கிறேன்

கட்டாயம் முடியாது,
நான் என் மௌனத்தை
முறிக்கும் வரை



பார்த்திபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுக்கொருமுறை நினைவுபடுத்தும் அரசியல் கைதிகளின் விடுதலை



– மட்டுநேசன் –

## செப்டெம்பர் 12 கைதிகள் நாள்.

தமிழர் அரசியலைப் பொறுத்தவரை இது மறக்கப்பட்ட விடயமாகிவிட்டது. தேர்தல் காலத்தில் முதலாவது விடயமாக அரசியற் கைதிகளின் விடுதலை பற்றித் தான் பிரஸ்தாபிக்கப்படும். பின்னர் மறக்கப்பட்டு விடும். 1991 இலிருந்து சிறைவாழ்வை அனுபவித்து வரும் அரசியற் கைதியும் உள்ளார். இவர் வெளியுலகத்தில் வாழ்ந்ததை விட சிறைக்குள் வாழ்ந்து வரும் காலம் கூடுதலானது. சிங்களவரும் ஆயுதமேந்திப் போராடினார்கள். ஆனால் இன்று எந்த ஜே.வி.பி உறுப்பினரும் சிறையில் இல்லை. அரசாங்கத்துடன் இணைவதற்கு சந்திரிகா காலத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் ஏதோ ஒரு வழியில் அனைவரும் விடுதலை பெற்றுவிட்டனர். தமிழரின் துரதிஸ்டம் இந்தப் பிரச்சினையைப் பிச்சைக்காரனின் புண்போலப் பேணுவதற்கு தமிழர் தலைமை முடிவு செய்துவிட்டது. அதனால் தான் இந்த விடயம் சுமந்திரன் கையில் ஏகபோகமாக ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அரசியற் கைதிகளின் விடுதலைக்கு ஒரு வழி இவ்விவகாரத்தைக் கையாளும் பேர் வழியை மாற்றுவதுதான்.

இதோ வருகிறது அமைச்சரவைப் பத்திரம் என்று ஏமாற்றினார். கோத்தபாயவிடம் எனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி விடுதலை பெற்றுத் தருவேன் என்றார். இப்படியாக காலத்துக்கு காலம் புதுப் புதுக் கதைகளைத் தான் விட்டுக் கொண்டிருக்கிறா-ரேயொழிய எதுவும் நடந்தபாடில்லை. ஆனால் சிங்கள அரசின் தேவை என்னவோ அதை நிறைவேற்றத் தலைகீழாக நிற்கிறார். இறுதியாக சர்வதேச விசாரணை முடிந்து போன விடயம் இனி உள்ளக விசாரணை தான் என்று அடித்துக் கூறுகின்றார். இவ்வளவு தூரம் அரசின் நிலைப்பாட்டுக்கு வக்காலத்து வாங்குபவரால் அரசியல் கைதிகளின் விவகாரத்தை முடித்து வைக்கத் தான் நேரமில்லை.

வடகிழக்குக்கு வெளியேயுள்ள நீதிமன்றங்கள் கைதிகள் தமது சுயவிருப்பத்தின் பேரில் அளித்ததாகச் சமர்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை ஒப்புக் கொண்டு தண்டனை வழங்கி வருகின்றன. கேகாலை பொலனறுவை உயர் நீதிமன்றங்களால் தண்டனை பெற்றோர் தொடர்ந்து சிறைகளில் வாடிவருகின்றனர். கைதிகள் விவகாரத்தை ஒருங்கிணைத்து இந்த விடயங்களைக் கையாள தமிழ்த் தலைமை ஆர்வம் காட்டவில்லை. முஸ்லிம்கள் தமது நோன்பை அனுஸ்டிப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை முஸ்லிம் தரப்புகள் செம்மையாகச் செயற்படுத்துகின்றார்கள். ஆனால் தமிழர் தரப்போ இப்போதைக்கு வாக்களிக்க முடியாதவர்கள் இவர்கள் எனக் கருதி அதில் அக்கறை காட்டுவதில்லை. ஆடிஅமாவாசை சித்திரா பௌர்ணமி போன்ற விசேட நாட்களின் முக்கியத்துவம் கருதி ஒரு துரும்பைக் கூட அசைத்துப் போட்டதில்லை. கொழும்பு இந்து மாமன்றத்தினர் மன்னார் ஆயர் போன்றோர் கைதிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளனர் தான் ஆனால் தமிழ்த் தலைமைக்கு வடக்கு முதல்வரைக் கவிழ்ப்பது எப்படி என்று தான் திட்டமிட நேரமிருக்கிறதே தவிர வேறெதற்கும் நேரமில்லை. நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தமிழ்க் கைதிகள் விவகாரம் தொடர்பாக தன்னுடன் எவரும் தொடர்பு கொள்ளவில்லை எவரும் காரணமின்றி கைதுசெய்யப்படவில்லை என்றும் நீதிமன்றச் செயற்பாடுகளில் அரசும் தலையிடுவதில்லை என்றும் கூறியமை கவனிக்கத்தக்கது.

உரிய மருத்துவ வசதிகள் வழங்கப்படாமையால் சுந்தரம் சதீஸ் உட்பட பல கைதிகள் மரணித்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைமையைப் பொறுப்பேற்ற சம்பந்தன் ஐயா கூட முள்ளிவாய்க்கால் உட்பட தமிழரின் படுகொலைகள் அரசியல் கைதிகள் பற்றி மூச்சுவிடவில்லை. அவருக்கு ஊர் ஊராக வரவேற்பும் ஆலயங்களில் வழிபாடும் நடத்தவும் துடிக்கும் பலரும் இவ்விடயத்தைப் பக்குவமாக சம்பந்தன் ஐயாவுக்கு எடுத்துச் சொல்லவில்லை. தேசியப்பட்டியல் நியமனம் யாருக்குக் கொடுப்பது என்று நினைத்துக் கொண்டு தூக்கத்துக்குச் சென்ற அவருக்கு துரைரட்ணசிங்கம் மாஸ்ரர் முகத்தைக் காட்டிய கோணேசப் பெருமாள் கூட அரசியல் கைதிகளின் விடயத்தைக் கனவில் கூட எடுத்துரைக்கவில்லை. யாரொடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம் என்பதே அரசியல் கைதிகளின் நிலை.

இன்றைய தேவை சர்வதேச விசாரணைக்கான கையெழுத்து மட்டுமல்ல அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழிவகுக்கும் ஏற்பாட்டினைப் பொறுப்பேற்பதும் தான். ஏனெனில் கைதிகளின் வக்கீல் செலவு அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. பூனைக்கு மணி கட்டுவது யார்?

# குப்பை லொறியில் நாவலரை ஏற்றியவருக்கு வரலாற்றில் எந்த இடம்

பகலவன்

தீவிரமாக மதப் பிரச்சாரங்களில் ஈடுபடுபவர்களைச் சரியாக அவ்தானித்தால் அவர்கள் பிறப்பிலிருந்து அந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள். தாங்கள் புதிதாகச் சேர்ந்த மதத்தின் மீது தமது விசுவாசத்தைக் காட்ட தலைகீழாக நிற்பார்கள். அதைப் போன்றதே வடக்கு மாகாண தவிசாளர் (சபை முதல்வர்) சி.வி.கே சிவஞானத்தின் நிலையும்.

இவர் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டார். இக்கட்சி சார்பாகப் போட்டியிட்ட கஜேந்திரகுமார் மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகிய போதும் இவருக்கு நாடாளுமன்றக் கதவை அடைத்தனர் யாழ்--கிளிநொச்சி மக்கள். கஜேந்திரகுமார் அரசியலுக்குப் புதியவர். எனினும் அவரது தந்தை குமார் பொன்னம்பலம் ஆற்றிய பணிகளைக் கௌரவிக்கும் முகமாகவே அவருக்கு வாக்களித்தனர் மக்கள். அவருக்கு வாக்களித்த எல்லோருமே தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. இந்த யதார்த்தத்தை உணராமல் தமிழ்க் காங்கிரஸ் கஜேந்திரகுமாருக்கு மட்டுமே ஆதரவாக நின்றது. தன்னை வெற்றியாளராக்க கட்சி முனையவில்லை என்று கோபித்துக் கொண்டு கட்சியிலிருந்து வெளியேறினார் சி.வி.கே சிவஞானம்.

அதன் பின்னர் சி.வி.கே தன்னைத் தமிழரசுக் கட்சியின் விசுவாசியாகக் காட்ட முனைந்தார். அதற்குப் பலனும் கிடைத்தது. கட்சிப் பிரமுகர்களின் பட்டியலில் இடம்பிடித்தார். கடந்த மாகாண சபைத் தேர்தலில் மாவை சேனாதிராஜாவை முதன்மை வேட்பாளராக்க வேண்டும் என ஆடாத கூத்தெல்லாம் ஆடினார். பயன் கிடைக்கவில்லை. ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளை அளித்து வடக்கு முதல்வர் வேட்பாளர் மீதான தமது நம்பிக்கையை வெளிப்படுத்தினர் யாழ் மாவட்ட மக்கள். ஆனால் இவர் ஆதரவளித்த மாவையோ யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் மொத்தமாக 60 ஆயிரம் வாக்குகளை மட்டுமே கடந்த தேர்தலில் பெற்றார்.

கடந்த தேர்தலில் வடக்கு முதல்வர் எடுத்த நிலைப்பாடு காரணமாக அவரைப் பதவி நீக்கம் செய்ய சபை முதல்வர் சி.வி.கே தீவிரமாக முயற்சி செய்தார் என்று செய்திகள் வெளியாகின. அதனை இவர் மறுத்தாலும் இவரது மறுப்பு உண்மைக்கு மாறானது என்பதை அண்மைய நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. சர்வதேச விசாரணையே வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானத்தை முதல்வர் கொண்டு வந்த போது இவர் நடந்து கொண்ட முறை அவரது பதவிக்குப் பொருத்தமில்லாதது. சபை முதல்வர் என்ற பதவியில் அமர்ந்தால் அந்தச் சிந்தனை மட்டுமே இருக்க வேண்டும். அதைவிடுத்து கட்சித் தலைமையின் அனுமதி பெற வேண்டும் என்று கூறுவானேன். இந்த இடத்தில் நடுநிலைமை தவறியுள்ளார் சி.வி.கே. அவரது எண்ணமெல்லாம் சம்பந்தன் மாவை கூட்டுக்குத் தனது விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது தானேயொழிய வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதல்ல.

முதல்வருடன் முரண்பட்டதை எமது மக்கள் ஏற்கப் போவதில்லை. சுமந்திரனின் பாராட்டைப் பெறவே இவரது செயல் உதவும். சபை ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்த பின்னரும் இவரது ஆட்சேபம் நிற்கவில்லை ஆயினும் பிரேரணை சபைக்கு கொண்டுவரப்பட்ட போது ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டது. முதல்வரை சிவாஜிலிங்கம் போன்று கையாளமுயன்ற சி.வி.கே மீன் முள்ளு சிக்கிய பிராமணனின் நிலையிலிருந்தார். உள்ளக விசாரணையே பயனளிக்கும் என்றும் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றும் கூறும் சுமந்திரனுக்குத் தாளம் போட்டால் கட்சியில் தனது இடத்தைத் தக்க வைக்கலாம் என்பது மட்டுமே சி.வி.கேயின் நிலைப்பாடு. செத்தவர்களுக்கு நீதி கிடைத்தாலென்ன கிடைக்காவிட்டாலென்ன என்பது தான் அவரது முடிவு. கொச்சையாகச் சொன்னால் எவன் பெண்டில்............ லெப்பைக்குத் தேவை நூறு பணம் என்றொரு முஸ்லிம் பழமொழி உண்டு.

சி.வி.கே யாழ்.மாநகர சபை ஆணையாளராக இருந்த போது ஒபரோய் தேவன் தலைமையிலான தமிழீழ விடுதலை இராணுவம் இவருக்கு மரண தண்டனை வழங்கத் தீர்மானித்தது. அந்த நடவடிக்கையில் ஒபரோய் தேவனும் நேரடியாகப் பங்குபற்றியதாக பலரும் பேசிக் கொண்டார்கள். இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர் தாம் இவருக்கு ஏன் தண்டனை வழங்குகிறோம் என்று குறிப்பிடும் அறிக்கையொன்றை அவர்கள் வீசிவிட்டுச் சென்றனர். அவர்கள் சுட்ட சூடு இவரது கன்னத்தைப் பதம் பார்த்தது. இதனால் அவர் ஒரு பல்லை இழந்தார். சி.வி.கே க்கு ஒரு பல் ஆடிக்கொண்டிருந்தது பிடுங்க நேரம் இருக்கவில்லை. ஒபரோய் தேவன் சுட்ட பிறகு அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு அந்தப் பல்லை வீசியெறிந்தார் சி.வி.கே என்று ஏனைய 35 இயக்கங்களில் பலவற்றில் இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கதைகள் உலாவின.

அதன் பின்னர் இவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு மாத்தையாவின் விசுவாசியாக தன்னை இனங்காட்டிக் கொண்டார். இதனால் பிற்காலத்தில் பல சங்கடங்களை இவர் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அது இவரது வாழ்வின் மிகச் சோதனையான கால கட்டம்தான்.

நாவலர் சிலையை நல்லூர் ஆலயச் சூழலில் இருந்து அகற்றக் கூடாதென்பது அவரது பெயரிலான சபையினரின் நிலைப்பாடு. ஆனால் ஆலய நிர்வாகத்தினரின் முடிவு இதற்கு மாறானதாக இருந்தது. இதனால் ஒரு நாள் குப்பை அள்ளும் பார ஊர்தியில் நாவலர் சிலை கொண்டு செல்லப்பட்டது. நாவலர் வீதியில் உள்ள கலாச்சார மண்டபத்தில் இச்சிலை வைக்கப்பட்டது. இன்றும் அங்கே தான் இச்சிலை உள்ளது. நாவலரை குப்பை அள்ளும் பாரவூர்தியில் ஏற்றிக் கடத்தியமைக்கு நன்றிக் கடனாக நல்லூரில் மாநகர சபைக் கட்டடம் இயங்க ஆலய நிர்வாகம் காணி வழங்கியது. இதுதான் சி.வி.கே ஆணையாளராக இருந்த காலத்தில் நிகழ்த்திய சாதனை.

நாவலரை அகற்றிய பாணியில் வடக்கு முதல்வரை அகற்ற சி.வி.கே முயன்றால் அதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாட்டர்லூ ஆக அமையும். ஏனைய அரசியல்வாதி-களைப் போல முதல்வர் கட்சியிடம் போட்டியிட விண்ணப்பிக்கவில்லை. எல்லா கட்சிகளும் ஒரு மனதாக போட்டியிட வருமாறு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே தான் தேர்தலில் போட்டியிடுவேன் என விக்னேஸ்வரன் நிபந்தனை விதித்தார். அதன் பின்னர் கட்சித் தலைமைகள் கையெழுத்திட்ட பின்னரே போட்டியில் சம்மதித்தார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வடக்கு முதல்வர் மன்னார் ஆயர் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் ஆகிய மூவர் மட்டுமே அவர்களின் நம்பிக்கைக்குரியவர்கள். வடக்கு முதல்வர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க முனைந்தால் கூட்டமைப்பு தனக்குத் தானே கொள்ளி வைத்தது போலாகிவிடும். மீண்டுமொரு முறை தேர்தலில் போட்டியிட முதல்வர் தயாராகவில்லை. அரசியலுக்குள் அவர் பிரவேசித்த பின்னரே இங்கு எல்லாம் பொய்மையாக உள்ளதை அவர் உணர்ந்து கொண்டார். சாகும் வரை பதவிக் கதிரையில் இருக்க விரும்புபவர்கள் இவர் மீது கடும் கடுப்பில் உள்ளார்கள். ஆனால் மக்கள் எப்போதும் விழிப்பாகவே உள்ளனர் என்பதை சி.வி.கே உணரவேண்டும். வரலாற்றில் இருந்து பாடம் கற்க மறுத்தால் சி.வி.கே க்கு பழக்கமான குப்பைத் தொட்டிக்குள் தான் அவர் போகவேண்டியேற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 70

# கடந்த காலமும் எதிர்காலமும்

(வி.என்.சந்திரகாந்தி)



**எமது** எதிர்காலத்தை தீர்மானிக்கும் பெரும் சக்தியாக விளங்குவது எமது கடந்த கால வாழ்க்கையும் செயற்பாடுகளும் தான்! வாழ்க்கையில் நாம் பல கட்டங்களை கடந்து வந்துள்ளோம். எமது அன்புப் பெற்றோருடன் வாழ்ந்த பால்ய பருவம், ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் உருவான மாணவப் பருவம், இளைஞர்களுடன் சுற்றித்திரிந்த வாலிப பருவம், பல்கலைக்கழக நாட்கள், தொழில் ஒன்றை தேடிக்கொண்டமை. இவையே ஏறத்தாள எமது முப்பது வருடகால நகர்வுகளாக கணிக்கப்படக்கூடியன.

ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் எமது சுவடுகளை நாம் திரும்பிப்பார்த்து சற்று சிந்தித்திருந்தால் எமது அடுத்த கட்டம் அந்நாளைய எதிர்காலம், மேலும் சிறப்பாக அமைந்திருக்கும். சரி அந்த வாய்ப்பை நாம் தவற விட்டிருந்தால் கூட இன்று ஒரு தொழிலில் அமர்ந்து சிறிது பணமும் சம்பாதிக்கும் ஒரு காலகட்டத்தில் எமது கடந்த காலத்தை சற்று எண்ணிப்பார்க்க முடியுமல்லவா?

எமது பால்ய பருவத்தில் குடும்ப கஷ்டம், பணநெருக்கடி என்பவையெல்லாம் என்ன என்று அறியாத நிலையில் எமது பெற்றோர் எம்மை தமது உயிரென தாங்கி அன்பு பாராட்டி அரவணைத்து வளர்த்தனர். எமக்கு நல்வழிகாட்டி பண்பை போதித்தனர். ஆரம்ப கல்வியை எமக்கு அளித்தனர். சமூகத்துடன் எப்படி பழக வேண்டும்? நன்றி உணர்வு, நல் ஒழுக்கம், தெய்வ பக்தி ஆகியனவற்றின் அவசியம் என்ன? என்பவை பற்றி எடுத்துரைத்து எமது மனதை பண்படுத்தினர்.

நாம் பாடசாலைக்கு செல்ல தயாராகும் நிலையில் எமது கடந்த காலம் பற்றிய நினைவலைகளை சற்று மனத்தில் இருத்தியிருந்தால் கட்டாயமாக நாம் அறிவிலும் அறனும் உடைய நல் மாணவனாக பள்ளியில் காலடி எடுத்து வைத்திருப்போம்! ஆசிரியர்களை எமது தெய்வமாக மதித்திருப்போம். அவர்கள் சொற்பணிந்து நடந்திருப்போம். அவர்களது வாக்கை வேதவாக்காக ஏற்றிருப்போம். அவர்கள் காட்டிய வழியில் எமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்திருப்போம். திறமையும் பணிவும் மிக்க மாணவனாக உருவாகியிருப்போம்.

பாடசாலைக் கல்வியை முடித்து பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த இளைஞர்கள் ஆகிய நாம் படிப்பறிவு குன்றிய எமது கிராமத்து மக்களுக்கு நகரில் உள்ள அலுவலகங்களில் செய்ய வேண்டிய கருமங்களை முடித்துக்கொடுத்தோம். அம் மக்களுக்கு அது ஒரு சேவையாக அமைந்தது. ஆனால் பல்கலைக்கழக அனுமதியோ வேலைவாய்ப்போ கிடைக்கப்பெறாத இளைஞர்கள் பலர் புலம் பெயர்ந்து சென்றனர்.

அதிக அளவு புள்ளிகள் பெற்று எமக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்து விட்ட நிலையில் எமது கடந்த காலம் பற்றிய நினைவலைகளை சற்று மீட்டுப் பார்ப்போமாயின் பேராசிரியர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய முதன்னிலை மாணவனாக நாம் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டிருப்போம். பேராசிரியர்கள் எமது உயர்ந்த பண்பாலும் கல்வியின்மேல் நாம் காட்டும் ஆர்வம் காரணமாகவும் கவரப்பட்டிருப்பார்கள். மாணவிகளுடன் பண்பாக நடப்போம். அவர்களை எமது கல்வி செயற்பாடுகளில் ஒன்றிணைத்து உதவிகள் புரிவோம்.

ஏழை மாணவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களுக்கு இயன்ற உதவிகள் புரிவோம். பேராசிரியர்களின் உதவியுடன் ஆய்வுகளை மேற்கொள்ளுவதுடன் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பிப்போம். எமது சக்திக்கேற்ப எழுத்தாற்றலை விருத்தி செய்து கொண்டு எழுத்தாற்றல் சாரந்த போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெறுவோம்.

பல்கலைக்கழக நூலகம் மிகவும் பெறுமதி வாய்ந்தது. அதிக நேரத்தை வாசிப்பதில் செலவழிப்பதன் மூலம் எமது அறிவை பெருக்க முடியும்.

எமது தாய் மொழியில் ஈடுபாடும் திறமையும் இருப்பது சாதாரணமே. ஆனால் தேசிய மொழி சிங்களத்தில் நாம் ஈடுபாடு காட்ட வேண்டும்.

இம் மொழியைக் கற்றுவிட்டால் நாம் பெரும்பான்மை சமூகத்துடனும் அவர்கள் எம்முடனும் சுமுகமாக பழக முடியும். அது தவிர ஆங்கிலம் உலக மொழி. இன்று உலகம் பூராகவும் போக வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. அதற்கு பொது மொழியாம் ஆங்கிலம் போல கைகொடுப்பது எதுவுமே இல்லை.

இலக்கணத்தை சற்று பயில்வதன் மூலமும் உச்சரிப்பை திருந்த கற்றுக் கொள்வதன் மூலமும் எழுதவும் பேசவும் இயலுமானதாகும்.

நாம் ஏறத்தாள ஐந்து வருடங்களை பல்கலைக்கழகத்தில் செலவிடுகின்றோம். முழுமனிதர்களாகின்றோம். நாடு பூராகவும் பரந்து வாழும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் நட்பை பெறுகிறோம்.

பல்கலைக்கழக தகுதியுடன் பல தொழில் வாய்ப்புக்களுக்கான போட்டிப்பரீட்சைகளில் சித்தி பெற்ற நாம் எமது கடந்த காலத்தை கட்டாயமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இன்று நல்ல தொழிலில் இருந்து கொண்டு அதிக பணம் சம்பாதிக்கின்றோம் என்றால் முதலில் எம்மை பெற்றெடுத்து ஆளாக்கிய பெற்றோரை நினைவு கூரவேண்டும். எமது வளர்ச்சியில் பூரித்துப் போயுள்ள அவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள்.

பாடசாலை கல்வியை புகட்டிய ஆசிரியர்கள் பலர் ஓய்வூதியம் பெறும் நிலையை அண்மித்துள்ளார்கள். மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக திகழ்ந்த அவர்கள் தமது வாழ்வில் எந்த ஒரு சுபீட்சத்தையும் காணாதும் தமது புத்திரிகளை கரை சேர்க்க இயலாமலும் தவிக்கின்றார்கள்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் எம்மை சிகரத்தில் ஏற்றிவிட்டு தமது சேவைக்காலத்தின் இறுதியிலும் கூட அடுத்த மாணாக்கர்களை உருவாக்கும் பணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ளார்கள்.

அவர்கள் யாவரையும் போன்றே நாம் பிறந்து வளர்ந்து உருவாகிய இந்த தமிழ் சமூகம் இந்நாட்டில் எமது உரிமைக்காகவும் சுயநிர்ணயத்துக்காகவும் பல அர்ப்பணிப்புகளுடன் போராடி வருகின்றது. எமது சுதந்திரத்திற்காக அது பெரும் அவலங்களையும் இழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது. உயிரிழப்புக்கள் என்று குறிப்பிட்டு சொல்வதாயின் அது எந்த ஒரு சுதந்திர போராட்ட உயிர்த் தியாகங்களுக்கும் குறைந்ததாக இல்லை. மக்கள் தமது வாழ்வாதாரங்-களை இழந்தார்கள். இருப்பிடங்-களையும் பிரதேசங்களையும் இழந்தார்கள். வழிபாட்டு தலங்களை பறி கொடுத்தார்கள். பெற்றோர் பிள்ளைகளை இழந்தார்கள், பெண்கள் தமது கணவன்மாரை பறி கொடுத்தார்கள். ஆனால் எமது தமிழ் சமூகம் எமக்காக மேற்கொண்ட மண் மீட்பு போராட்ட உணர்வு முற்றுப்பெறவில்லை!



நாம் பல்கலைக்கழகத்தில் பயின்ற போது பல்லாயிரக்கணக்கான பிற மாவட்ட இளைஞர்களின் நட்பு எமக்கு கிட்டியுள்ளது. அவர்கள் எல்லாம் இப்போ நல்ல தொழில் புரிபவர்களாக இருப்பார்கள். நாம் களத்தில் இறங்கினால் எமது சமூகத்தின் விடிவு தொலைவில் இருக்காது!

கடந்தகால நினைவலைகள் நீண்டு கொண்டே போகலாம் எமது அடுத்தடுத்த நகர்வுகள் எம்மை நேரடியாக ஆளாக்கியவர்களுக்கும் இந்த தமிழ் சமூகத்திற்கு நன்றிக்கடன் செலுத்துவதாகத்தான் இருக்க வேண்டும்.

புலம் பெயர்ந்து சென்ற எமது உறவுகள் தம்மை உருவாக்கிய தமிழ் சமூகத்திற்கு உதவுவதாக எண்ணி தரகர்கள் கையிலும் அரசியல் வாதிகளின் கையிலும் சிக்கி தடுமாறுகின்றனர். அவர்கள் எம் நாட்டில் உடல் ரீதியிலும் உள ரீதியிலும் வாழ்வாதார ரீதியிலும் தடுமாறுகின்றவர்களுக்கு நேரடியாக உதவும் வண்ணம் நாம்தான் தூண்ட வேண்டும். புலம் பெயர்ந்த நாடுகளில் பிறந்த எம் மக்கள் தாம் கஸ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை அநாவசிய ஆடம்பர செலவுகளில் வீணடிக்காமல் அவர்கள் சார்ந்த உறவுகளுக்கும் தமிழ் சமூகத்திற்கும் பயன்படும் வண்ணம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று எமது இளைஞர்கள் பலர் வழிதவறிவிடுவதுதான் பத்திரிகைகளின் பிரதான செய்திகளாக இடம்பெறுகின்றன. அப்படியல்லாமல் பால்ய பருவத்திலும் வாலிப பருவத்திலும் தமது கடந்த காலத்தையும் அது சார்ந்த அனுபவத்தையும் எண்ணி எதிர்காலத்தை திட்டமிட்டு செயற்படுத்தினால் நிச்சயம் அவர்கள் தமிழ் சமூகத்தின் எதிர்கால நாயகர்கள் ஆவார்!

# சாப்பாடு செய்பவரா நீங்கள்!!!




கமலினி என்பவர் இடியப்பம் அவித்து கொடுக்கும் தொழிலை செய்து வந்தார். அவரது கணவரோ வெளிநாடொன்றில் பணிபுரிபவர். அவருக்கு இரு பிள்ளைகள். மூத்தவன் மகள் இரண்டாமவன் மகன். வசதியான இவர்கள் பொழுது போக்கிற்காக கேட்போருக்கு மாத்திரம் இடியப்பம் செய்து வழங்கி வந்தார்கள். இவர்களது வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் மங்களம் என்பவர் இருந்தார். அவரது கணவனும் வெளிநாட்டு பணியாளர். மங்களமும் கமலினியும் நெருங்கிய நண்பிகள். அவர்கள் இருவருக்கும் இடையில் எந்தவித ஒளிவு மறைவும் இருந்தது கிடையாது.

ஒரு நாள் திடீரென மங்களத்தின் உடல்நிலை பாதிப்படைந்தது. வைத்தியசாலை சென்ற அவள் மேலதிக பரிசோதனைக்காக வைத்தியசாலையில் தங்கி நிற்க வேண்டி ஏற்பட்டது. கொடுத்த தவறான சிகிச்சையினால் அவள் உடன் கண்டிக்கு மாற்றப்பட்டாள். அதுவரை மங்களத்தின் தங்கைக்கும் வீட்டிற்கும் பாதுகாப்பாக கமலினி ஒவ்வொரு நாளும் அவர்களின் வீட்டிற்கு சென்று இரவு சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு பத்து, பதினொரு மணியளவிலேயே தன் வீட்டிற்கு செல்வாள்.

ஒரு நாள் அவளது விறாந்தையில் மங்களம் வந்தமர்ந்தாள். அப்போது மணி மாலை 5.30 இருக்கும்.

வாங்க இருங்க என வரவேற்று. எப்போ வந்தீங்க? சொல்லியிருந்தா நானே வந்திருப்பனே! இப்ப உடம்பிற்கு எப்படி? என தனது ஆதங்கத்தை பல கேள்விகள் மூலம் அடுக்கிக் கொண்டே சென்றாள் கமலினி.

எதற்கும் மங்களத்திடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. மாறாக தேம்பித் தேம்பி அழுதாள். தொடர்ந்து என் பிள்ளைகளையும் கணவரையும் நீ தான் தேற்ற வேண்டும். என் தங்கையை அவளுக்கான ஒரு வாழ்க்கையை தேடிக் கொடுத்து விடு கமலி.... மீண்டும் அழுதாள். பின் கண்ணீரை துடைத்துக்கொண்டு நீ இருக்கின்றாய் தானே! அதனால் எனக்கு பயமில்லை என்றாள். உடன் கமலினி ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறீங்க. நீங்க அவங்க கூட தானே இருக்கிறீங்க. இப்ப அழுது திரும்பவும் வருத்தத்தை தேட வேண்டாம் என்றாள்.

சரி விடு வீட்டிற்கு நிறைய பேர் வருவாங்கள் எனக்கு ஒரு 200 இடியப்பம் அவித்து தாறியா என கேட்டாள் மங்களம். அதுக்கென்ன என கூறியவாறே சமையலறைக்குள் சென்று இடியப்பம் அவிக்கச் சென்றாள் கமலினி. சமைக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டெழுந்த மகள் அம்மா! அம்மா எனக் கூப்பிட்டவாறு சமையலறைக்குள் சென்று என்ன செய்றீங்க எனக் கேட்டாள். அதற்கு அவளோ மங்களம் அன்ரி வந்துவிட்டா அவ இடியப்பம் கேட்டவ, எனக்கு கொ!சம் உதவி செய்றியா எனக் கேட்டவளை ஆச்சரியமாக பார்த்த மகள்.....

அம்மா எனக் கத்தினாள். திடுக்கிட்ட கமலி பேயறைந்தது போல் முழித்தாள். பின் சிறிது தணீரை பருகி ஆழ்ந்து சிந்தித்தாள்.

நடந்ததை விளங்கிக் கொண்டவளாக தலையை ஆட்டிய கணம் அவளுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. மங்களத்தின் தங்கை மறுமுனையில் அழுது தழுதழுத்த குரலில் கமலி அக்கா... அக்கா.... அக்கா, என்னை ஏமாற்றிச் சென்று விட்டாள் என கதறினாள்.

வீட்டு வாசற்கதவு திறந்து மூடும் சத்தம் கேட்ட கமலி தன்னை சுதாகரித்துக் கொண்டாள்.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் "தனி ஒருவன்"

### ராஜாவின் இயக்கத்தில் ஜெயம் ரவி, நயன்தாரா, அரவிந்சாமி நடிக்கும்



நல்லவன் - கெட்டவன் இது தான் எப்போதும் தமிழ் சினிமாவிற்கான பார்முலா. இதில் கெட்டவனை அடித்து நல்லவன் கிளைமேக்ஸில் வெற்றி பெறுவது தான் எழுதப்படாத முடிவு. இந்த பழைய கதைக்களத்தை இன்றைய ட்ரண்டிற்கு ஜெயம் ரவி - அரவிந்த் சாமியை புகுத்தி ராஜா ருத்ரதாண்டவர் ஆடியிருக்கிறார்.

சிறு வயதிலேயே கிரிமினல் மைண்டில் இருக்கு அரவிந்த் சாமி, ஏழையாக பிறப்பது தவறு, ஆனால், ஏழையாக இறப்பது தான் தவறு என்ற குறிக்கோளில் அரவிந்த் சாமி இந்த சமூகத்தில் பெரும் புள்ளியாக வளர்கிறார். அவருக்கு மாறாக நேர்மை, கடமை என ஐபிஎஸ் அதிகாரியாக ஜெயம்ரவி, சிறுசிறு குற்றத்தை கூட தேடி தேடி அழைந்து துப்பாக்கி விஜய் ஸ்டைலில் ஒரு பெரிய குற்றத்தை கண்டிப்பிடிக்கின்றார். இந்த குற்றங்களுக்கு எல்லாம் மூலகாரணம் அரவிந்த் சாமி என தெரிந்து அதன் பின் இவர்களுக்குள் நடக்கும் ஆடுபுலி ஆட்டம் தான் தனி ஒருவன்.

ஜெயம் ரவிக்கு பேராண்மைக்கு பிறகு ஒரு சிறந்த படம் என்றால் மிகையல்ல, ஒவ்வொரு காட்சிகளிலும் சிக்ஸர் அடிக்கின்றார். அவருடன் வரும் நண்பர்கள் கணேஷ், வெங்கட் ராம் மற்றும் சிலரும் கதாபாத்திரமாக வாழ்ந்திருக்கிறார்கள். நயன்தாரா, ஜெயம் ரவியை துரத்தி துரத்தி காதலிக்கும் கதாபாத்திரம், பிறகு அவர் சோர்ந்து இருக்கும் இடத்தில் 'உன்னால முடியும் பாஸ்கர்' கதாபாத்திரமாக மாறி முறுக்கேற்றுகிறார்.

படத்தின் வசனம் ஒவ்வொன்றும் சைக்காலஜி படித்தால் தான் புரியும் போல, 'நாமே எல்லோரும் பேப்பர்ல வணிக செய்தியை தான் படிக்கிறதே இல்லை, ஆனால், அந்த பக்கத்தை வைத்து தான் மற்ற எல்லா பக்கங்களுக்கும் செய்தியே கிடைக்கின்றது' என பல இடங்களில் 'அட' என்று சொல்ல வைக்கின்றது.

இவை அனைத்திற்கும் மேல் அரவிந்த் சாமி... ரியல் கம் பேக் என்று சொல்லலாம், அடுத்த வருடம் நெகட்டிவ் கதாபாத்திரத்திற்கு விருதில் இவர் பெயரை எழுதிவிடலாம். ஜெயம் ரவி- அரவிந்த் சாமி டாம் & ஜெர்ரி சண்டை, ஹிப் ஹாப் தமிழனின் பின்னணி இசை, விறுவிறுப்பான கிளைமேக்ஸ் காட்சிகள் அனைத்திற்கும் மேல் திரைக்கதை. தம்பி ராமையாவின் ஒன் லைன் காமெடி ரசிக்க வைக்கின்றது. ராம்ஜி ஒளிப்பதிவு ஒவ்வொரு காட்சியையும் மிக துல்லியமாக படம்பிடித்து அழகாக காட்டியுள்ளது. பாடல்கள் நன்றாக இருந்தாலும் சேஸிங்கில் இருக்கும் போது கடைசி டூயட் தேவையா? எனத் தோன்றுகின்றது. சில லாஜிக் மீறல்கள் மற்றப்படி வேறு ஒன்றும் இல்லை.

மொத்தத்தில் ஜெயம் ரவி தனி ஒருவனாக வந்தாலே கலக்குவார், இதில் அண்ணனுடன் என்றால் செஞ்சுரி தான்.



## என்ன ஒரு மனசு நயனுக்கு

நயன்தாரா இயக்குனர் விக்னேஷ் சிவனை இவர்கள் இருவருக்கான காதல் நானும் ரவுடிதன் படத்தின் படப்பிடிப்பில் தான் தொடங்கி இருக்கிறது.

தற்போது இப்படத்திற்கான ஷூட்டிங்கை முடிக்காமல் விக்னேஷ் இழுத்தடித்து வருகிறாராம். இதனால் கோபமடைந்த தனுஷ் இனி பணம் எதுவும் தர முடியாது, படத்தை முடித்து கொடுப்பது உன் பொறுப்பு என்று கூறிவிட்டாராம். இது நயன்தாராவுக்கு தெரியவர, அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என கடைசி ஐந்து நாட்களுக்கான செலவை தானே ஏற்பதாக கூறியுள்ளார்.



சுசீந்திரனின் இயக்கத்தில் வெளியான "பாயும் புலி" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......




## மாபெரும் வெற்றியில் "தனி ஒருவன்"

ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் என மூன்று மொழிகளில் தயாராக உள்ளது தனி ஒருவன். மேலும் மராத்தியில் ரீமேக் செய்ய நடிகை ஜெனிலியா விருப்பம் தெரிவித்துள்ளாராம்.

2013ம் வருடம் மலையாளத்தில் வெளியாகி மாபெரும் வெற்றிபெற்ற த்ரி'யம் திரைப்படம் தான் சமீபத்தில் பல மொழிகளில் ரீமேக் செய்து வெற்றி கண்ட பெருமையை தக்கவைத்துள்ளது. அதே போல் தனி ஒருவனுக்கும் இந்த பெருமை கிடைக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேவையாளன் கருணாகரன்

குறும்பட துறையிலிருந்து சினிமாவில் வெற்றி தடம் பதித்தவர் நடிகர் கருணாகரன். நல்ல பொழுதுபோக்கான படங்களில் நடித்து மக்களை மகிழ்விக்கும் நடிகராக பெயர் எடுத்து வருகிறார். இந்நிலையில் தனது ட்விட்டர் பக்கத்தில் இனிமேல் ஒவ்வொரு படத்துக்கும் வாங்கும் சம்பளத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாயை நமது பசியை தீர்க்கும் ஏழை விவசாயி குடும்பத்துக்கு கொடுக்க போகின்றேன் என தெரிவித்துள்ளார்.



## இரு குழந்தைகளுக்கு தாயானார் நயன்



நயன்தாரா நடித்துள்ள பேய்ப் படமான மாயா ட்ரெய்லர் சர்வதேச அளவில் கவனத்தைக் கவர்ந்துள்ளதாக அதன் இயக்குநர் தெரிவித்துள்ளார். பொடன்சியல் ஸ்டுடியோ சார்பில் எஸ்.ஆர் பிரபு தயாரித்து அஷ்வின் சரவணன் இயக்கி வெளிவரவிருக்கும் திரைப்படம் மாயா. கதை தயாராகிய உடனே நயன்தாராவிடம் பேசி கதையை சொல்லி முடித்ததும் தான் கண்டிப்பாக படத்தில் நடிப்பதாக தெரிவித்துள்ளார் நயன்.

படத்தில் இன்னுமொரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் ஆரி பத்திரிகைகளுக்கு ஓவியம் வரையும் நபராக வருகிறார். அவர் வரையும் ஓவியங்களில் இருந்து தான் கதையின் ஒவ்வொரு முடிச்சும் அவிழும். ஆரியும் கதையை கேட்டதும் கொடுக்கும் சம்பளத்தை வாங்கி கொண்டு நடிக்கிறேன் என்று கூறிவிட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## நாசாவின் உருமாறும்



பறக்கு ... ம் இறக் ... த வெற்றிகரமாக உருவாக்கி, அதை பரிசோதனையும் செய்து பார்த்து விட்டது அமெரிக்காவின் நாசா. அமெரிக்காவின் விமான படை ஆய்வு மற்றும் என்ஜினீயர் குழுவோடு இணைந்து கடந்த 1 வருடமாக இந்த ஆய்வில் நாசா ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த உருமாறும் விமான இறக்கை தொழில்நுட்ப மாற்றமானது, போர் விமானங்களுக்கு மட்டுமின்றி அனைத்து வகையான விமான சேவைகளுக்கும் பயன்படுத்தப்பட உள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரூ.3000க்கு டேப்ளெட் விரைவில் வெளியீடு..!




சந்தையில் கிடைக்கும் மற்ற டேப்ளெட் கருவிகளுடன் ஒப்பிடும் போது பாதி விலையில் புதிய டேப்ளெட் கருவியை வெளியிட அமேசான் திட்டமிட்டுள்ளது. அதன் படி 6 இன்ச் திரை கொண்ட டேப்ளெட் கருவியின் விலை ரூபா.3335 வரை இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதோடு அமேசான் நிறுவனம் 8 இன்ச் மற்றும் 10 இன்ச் திரை கொண்ட டேப்ளெட் கருவிகளையும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. இந்த டேப்ளெட் கருவிகள் வீடியோ ஸ்ட்ரீமிங் மற்றும் சமூக வலைதளங்கள் மற்றும் ஆன்லைன் ஷாப்பிங் செய்ய வசதியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

OTHER

## 3D தொடுதிரையுடன் அறிமுகமாகும் iPhone 6S



மக்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்த ஸ்மார்ட் கைப்பேசியான iPhone இன் புதிய பதிப்பான iPhone 6 மற்றும் iPhone 6 Plus கடந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந் நிலையில் விரைவில் iPhone 6S மற்றும் iPhone 6S Plus ஆகிய கைப்பேசிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறிருக்கையில் குறித்த கைப்பேசிகள் தொடர்பான பல தகவல்கள் நாளுக்கு நாள் வெளியாகிய வண்ணம் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக iPhone 6S கைப்பேசியானது முப்பரிமாண தொடுதிரையினைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது எனும் தகவல் வெளியாகியுள்ளது. எனினும் இத் தகவலை அப்பிள் நிறுவனம் உத்தியோகபூர்வமான தெரிவிக்கவில்லை.

## நீரில் மிதக்கும் இராட்சத உணவுப் பண்ணை



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர்கள் நீரில் மிதக்கக்கூடிய இராட்சத உணவுப் பண்ணையை உருவாக்கியுள்ளனர். மூன்று தட்டுக்களைக் கொண்ட இப் பண்ணையில் நாளாந்தம் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்றவாறு வருடாந்தம் 10 தொன்கள் வரையான மேலதிக உணவை உற்பத்தி செய்ய முடியும்.


இவற்றில் 1.7 தொன் மீன்களும், 8.1 தொன்கள் மரக்கறி மற்றும் பழ வகைகளும் அடங்கும். இங்கு உணவு உற்பத்தி செய்வதற்கு நிலமோ அல்லது தூய நீரோ அவசியம் இல்லை என்பது விடேட அம்சமாகும். அதாவது சூரிய சக்தியின் உதவியுடன் இயக்கப்படும் இப் பண்ணையில் உப்பு அகற்றப்பட்ட கடல் நீரே நேரடியாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இப் பண்ணையின் அடிப்பகுதி மீன் உற்பத்திக்கு எனவும், மேற்பகுதி மரக்கறி மற்றும் பழவகை உற்பத்திக்கு எனவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பண்ணையானது 200 மீற்றர் அகலம், 350 மீற்றர் நீளம் உடையதாக அமைந்துள்ளது.

## இரு புறமும் பார்வையிடக்கூடிய திரையினை அறிமுகம் செய்தது LG



LG நிறுவனமானது இரு புறமும் காட்சிகளை (Double Sided) உருவாக்கக்கூடிய திரையினை ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் இடம்பெற்ற IFA 2015 நிகழ்வில் அறிமுகம் செய்துள்ளது. OLED (organic light-emitting diode) தொழில்நுட்பத்தினை கொண்டு உருவாக்கப்பட்ட இத் திரையில் 281 சென்ரி மீற்றர், 139 சென்ரி மீற்றர் அளவுகளைக் கொண்ட இரு வகைகளை உருவாக்கியுள்ளது. இதேவேளை இவற்றின் தடிப்பு 5.3 மில்லி மீற்றர்களாக காணப்படுவதுடன், இந்த அளவானது iPhone 6 ஸ்மார்ட் கைப்பேசியின் தடிப்பினை விடவும் குறைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மாதிரிகளை மட்டுமே அறிமுகம் செய்துள்ள LG நிறுவனம் விரைவில் விற்பனைக்கு விடக்கூடிய திரைகளை உருவாக்கவுள்ளது.



ஜப்பானை சேர்ந்த பிரபல கேமிரா தயாரிப்பு நிறுவனமான "கேனான்" 250 மெகாபிக்சல் சென்சாரை உருவாக்க இருக்கிறது. இந்த முயற்சி வெற்றி அடைந்தால் இதன் மூலம் கிடைக்கும் "ரெசெல்யுஷன்" (Resolution) உலக சாதனையாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது 19,580X12,600 என்ற விகிதத்தில் ரெசெல்யூஷன் கிடைக்கும். இந்த அளவிலான மெகாபிக்சல் மூலம் 18 கிலோ மீட்டர் உயரத்தில் பார்க்கும் ஒரு விமானத்தின் மேல் எழுதப்பட்டுள்ள பெயர் வரை துல்லியமாக தெரியும் என்று கூறியுள்ளது கேனான் நிறுவனம்....

Canon

## அதி வினைத்திறன் வாய்ந்த டிஜிட்டல் கமெரா

உள்ளங்கையில் அடங்கக்கூடிய ஸ்மார்ட் கைப்பேசிகளில் பல்வேறு வினைத்திறன்கள் மற்றும் துல்லியம் வாய்ந்த கமெராக்கள் இணைக்கப்படுவது அனைவரும் அறிந்ததே. தொழில் நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி இவ்வாறிருக்கையில் அமெரிக்காவின் எரிசக்தி துறையானது உலகிலேயே அதிக வினைத்திறன் வாய்ந்த டிஜிட்டல் கமெராவினை உருவாக்கும் பணியில் இறங்கியுள்ளது. 3.2 ஜிகா பிக்சல்களை உடைய இக் கமெரா வடிவமைக்கப்பட்டதன் பின்னர் தற்போது சிலியிலுள்ள Large Synoptic Survey Telescope (LSST) எனும் தொலைகாட்டிக்கு இணையாக செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 3.2 ஜிகா பிக்சல் என்பது தற்போது பாவனையிலுள்ள 1 மெகாபிக்சல் கமெராவினை போன்று 3200 மடங்கு அதிக வினைத்திறன் உடையது என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இக் கமெராவானது 2022 ஆம் ஆண்டில் இருந்து தனது செயற்பாட்டினை ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொலைக்காட்சியில் புதிய அப்பிளிக்கேஷன்

ஸ்மார்ட் கைப்பேசியிலான இந்த அப்பிளிக்கேஷன் ஆனது இரவு நேரங்களில் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கையில் நித்திரைக்கு செல்லும் நேரங்களை அறிந்து குறித்த நேரத்தில் தொலைக்காட்சிப் பெட்டியை தானாகவே நிறுத்திக்கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது மொத்தமாக நித்திரை செய்யும் நேரம், தூக்கத்தின் திறன், நித்திரை செல்ல எடுக்கும் நேரம், நித்திரையில் இருந்து விழிக்கும் தடவைகள், படுக்கையை விட்டு அகலும் தடவைகள், கண்ணின் அசைவுகள் மற்றும் ஆழ்நித்திரையின் சதவீதம் என்ற 7 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டியை நிறுத்துவதற்கான நேரத்தை துல்லியமாகக் கணிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# HTML தமிழில்....

**கடந்த வார தொடர்ச்சி ....**

இந்த வாரம் HTML ஆவணத்தின் அடிப்படைகளான, Tags (குறிஓட்டுகள்), Element (உறுப்பு), Attributes (பண்புகள்) போன்றவற்றில் முதலில் TAGS (குறிஓட்டுகள்) என்பதை ஒரு சிறிய விளக்கத்துடன் பார்ப்போம்.

குறிஒட்டுகள் என்பதற்கான விளக்கம் கடந்த இடுகைகளில் தெரிவித்திருந்தேன். இந்த குறிஒட்டுகள் (Tags) பலவகைப்படும். இந்த குறிஒட்டுகளைப் பற்றி சிறிய விளக்கத்துடன் பார்ப்போம்.

நாம் கணியில் ஒரு எழுத்தை தட்டச்சிடும்போது என்ன எழுத்தை தட்டச்சிடுகிறோமோ அதே எழுத்தாகவே எடுத்துக்கொள்ளும். உதாரணமாக C என்னும் எழுத்தை தட்டச்சிடும்போது C ஆகவே எடுத்துக்கொள்ளும். இது கணினியின் பண்பு.

## குறிஒட்டுகள் (Tags)

அந்த எழுத்து சிறியதாகவோ, பெரியதாகவோ, தடிமனாகவோ, அல்லது சாய்வெழுத்தாகவோ இருப்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை.

ஆனால் அந்த Com என்னும் எழுத்து மேற்குறிப்பிட்ட பண்புகளில் இருக்க வேண்டும் (அதாவது தடிமன், சாய்வு, பெரியது, சிறியது) என நிர்ணயம் செய்வது இந்த HTML ல் அடங்கியுள்ள குறிஒட்டுகள்.

Com என்னும் எழுத்து தடிமனாக இருக்கவேண்டும் என உலவிக்கு தெரிவிப்பதற்கு C க்கு முன்னும் பின்னும் இவ்வாறு குறிஒட்டுகள் (Tags) சேர்க்க வேண்டும்.

<B>Com</B>

இந்த குறிஒட்டிற்குப் பெயர்தான் டேக்(Tag).

HTML-ல் குறிப்பிடப்படும் குறிஒட்டுகள்(TAGS), எல்லா பிரௌசர்களிலும் ஒரே பொருளிலேயே குறிக்கப்படும். அதாவது வலைஉலவிகள் Firefox opera> Google chrome போன்ற அனைத்து வெவ்வேறான உலவிகளும் HTML குறியீடுகளை ஒரே பொருளிலேயே எடுத்துக்கொள்கிறது.

HTML ஆவணத்தை உலவியின் மூலமாக திறந்து பார்க்கும்போது நாம் எழுதிய குறிஒட்டுகள்(TAGS) உலவியில் தெரிவதில்லை. ஆனால் அதன் விளைவுகள் தெரியும்.

HTML ஆவணமும், அதனுடைய வெளிப்பாடு வலைஉலவியில் எப்படித் தெரிகிறது என்பதையும் காட்டியிருக்கிறேன்.

| HTML ஆவணம் | உலவியில் அதன் வெளிப் |
|---|---|
| இது ஒரு <b>அட்டவணை</b> ஆகும். | இது ஒரு **அட்டவணை** ஆகும். |

என்ற HTML உறுப்பானது வலையுலவியால் அட்டவணைஎன்ற தடிமனான வார்த்தையாக மாற்றப்பட்டுள்ளது...

**நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக்கதை

# எங்கடை சனம்

– திருமலை. வீ. என். சந்திரகாந்தி –

நாட்டு நிலைமை முற்றிலுமாகத்தான் மாறிப்போய்விட்டது. நம்பவே முடியேல்லை. தெற்கில் இருந்து கிழக்குக்கு 'ரூர் பஸ்கள்' என்ன? வான்', 'கார்' என்று தனியார் வாகனங்கள் என்ன!

மூன்று மாதங்களுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்துவிட்டு குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் விடுதலை பெற்று வந்த கிராம சேவகர் குமரகுருவுக்கு கண்ணைக் கட்டி இருட்டில் வைத்திருந்து பின்னர் கட்டை அவிழ்த்து வெளிச்சத்தில் விட்டது போல இருந்தது.

'அறுவான்கள் சும்மா இருந்த என்னை என்ன மாதிரி மாட்டிவிட்டான்கள்'

சிறையில் இருந்த நாட்களில் குமரகுரு இப்படித்தான் இந்த சனத்தை நொந்து திட்டிக் கொண்டிருந்தார். சமாதான முன்னெடுப்புக்கள் அவருடைய விடுதலைக்கும் சார்பாக அமைந்து விட்டது!

சுதந்திரமாக வீட்டு முற்றத்தில் நடந்த படி 'டூத் பிரஷை' கொடுப்பு வரை செலுத்தி காவி படிந்த பற்களை ஒரே நாளில் வெண்மையாக்கிவிடும் முயற்சியில் அவர்.

விடுதலையாகி வந்ததுமே பொது நிர்வாக அமைச்சு அவர் முன்னர் ஒரு முறை சேவையாற்றிய அந்த பாரம்பரிய மீனவர் கிராமத்துக்கே திரும்பவும் நியமனத்தைக் கொடுத்துவிட்டது. அவருக்கு அது சிறிது ஆறுதலாக இருந்தாலும் இந்த சனத்தால் தான் அடியும், 'நொருக்கும்' வாங்கி அவலப்படவேண்டி வந்ததென்பது மனதுக்குள் ஒரு தீராத நெருடலாக இருந்தது.

உண்மையிலேயே குமரகுரு கிராம சேவகர் ஒரு நல்ல மனிதர் மட்டுமல்ல அப்பாவி! இந்த கிராமத்தில் 'சமுர்த்தி' எடுக்காதவர் யார்? மழைபெய்கையில் சிறிய காற்று வீசினால் போதும். எல்லோருக்குமே நட்டஈடு! நற்சான்று பத்திரம் வேண்டுமா? உடனே! அப்படிப்பட்ட தயாள குணத்தாற்தான் அவருக்கு அந்த வில்லங்கமும் வந்து சேர்ந்தது. அவரது வீட்டு முற்றத்திலேயே 'சீற்றால்' வேய்ந்து தரைபோடப்பட்ட கட்டடம் தான் அவருடைய அலுவலகம். கஸ்டகாலம் என்று வருகின்ற போது எந்த நல்ல குணங்களும் எவரையும் காப்பாற்றமாட்டது போலும்!

அப்படித்தான் அன்று சம்பவித்தது நல்ல வாட்டசாட்டமான இளந்தாரி ஒருத்தன் அவரை சந்திக்க வந்திருந்தான். அவனுடைய சிரிப்பைப் பார்கிறவர்களுக்கு அவனுடன் முன்னைய பல ஜென்மங்களிலிருந்தே உறவுமுறை இருப்பது போலத்தான் தெரியும்.

பாவி சிரித்தவாறு வந்தான் குமரகுரு மருண்டே விட்டார்!

'டிஸ்ரிக் ஐடென்ரி காட்' தானே? ஒரு நடைமுறைக்கு நான்கே நான்கு கேள்விகள் மட்டும் கேட்டார் தலையெழுத்தான கையெழுத்தை போட்டே விட்டார்!

அத்துடன் தொட்டது சனியன். உளவுபிரிவு வந்தது. அந்த இளைஞன் பற்றி கேள்வி மேல் கேள்வி கேட்டது. மேலதிக விபரத்தை தெரிந்துகொள்ள அவரைத் தங்களுடனேயே தலைநகருக்கு அழைத்துச்சென்று விட்டார்கள்.! மூன்று மாதங்கள் சிறையில் இருக்க நேர்ந்தது.

வாயிற்கதவினை யாரோ தட்டும் சத்தம்கேட்டது. பல் துலக்கியபடியே சென்று பூட்டியிருந்த கதவினை திறந்துவிட்டார் குமரகுரு. ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி. கழுத்தில் கனதியான தாலிக்கொடி. செல்வத்தின் திமிர்ப்பு நன்கு துலங்கியது.

'போய் வாங்கிலை இருங்கோ'

"நான் பாருங்கோ ஒரு அவசரமான விசயமாய்" அந்தப் பெண் அவசரம் காட்டினாள். குமரகுரு இப்படி எத்தனை பேருடைய அவசரத்தை பார்த்தவர். பாதிக்கப்பட்டவர். சரி இருங்கோ வாறன்"

மேன்மேலும் இந்த சனம் அவசரம் காட்டித் தன்னை பிரச்சனையில் மாட்டிவிடக்கூடும் என்பதில் அவர் விழிப்பாக இருந்தார். குளியலறையில் சென்று குளித்து உடை மாற்றி, இந்த பெண்ணை இதற்கு முன்பே சந்தித்ததான நினைப்பு ஒன்று மனதில் தோற்றம் பெற்று நின்று எச்சரித்தது.

'ஓ பத்து வருடங்களுக்கு முன்னர் நான் இந்தப் பெண்ணைச் சந்தித்திருக்கின்றேன்

அப்போ நல்ல இளமை பொலிவுடன் இருந்த அவள் அன்றொருநாள்,

'ஐயா காவல்துறையினர் சோதனை என்று வந்து எங்கடை வீட்டு சாமான்கள் எல்லாத்தையும் உடைச்சதோடை என்னுடைய இவரையும் கூட்டிப் போயிற்றான்கள்' தலையில் அடித்தபடி அழுதாள்.

ஏனாம்? குமரகுரு வினாவினார்.

அவள் சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்து அழுகையை அடக்க முயற்சித்தவாறு.

'எனக்கு மூண்டு ஆண்பிள்ளைகள், மூவருமே இளந்தாரிகள், பிரச்சனைக்கு பயத்திலை நாங்கள் அவையளைத் தலைநகருக்கு அனுப்பிபோட்டம். காவல்துறையினர் சொல்லுகினம் 'மூண்டு பேரும் போராளிகளாய் போய்விட்டார்கள் என்று' விம்மி விம்மி அழுகிறாள்.

"ஐயா. ஐயா உங்களைத்தான் நம்பி வந்தனான் என்னுடைய பிள்கைள் மூவரும் போராளிகள் இல்லை எண்டு உறுதிப்படுத்தி நீங்கள் ஒரு கடிதம் தரவேண்டும்." அவள் வற்புறுத்தினாள்.

"அம்மா, இது நடைமுறைச்சாத்தியம் இல்லை, நீங்கள் கொஞ்சம் யோசிக்க வேணும்." குமரகுரு பல நியாயங்களை எடுத்துக் காட்டி மறுத்துரைத்தார்.

தனது கருமம் சித்திக்காது என்பதை உணர்ந்து கெண்டதும் அவள் கோபம் உச்சத்துக்கு ஏறியது' "நீரும் ஒரு மனுசனோ உம்மை பிறகு கவனிக்கிறேன்."

ஏசி, எச்சரித்துவிட்டு சென்றுவிட்டாள்.

குமரகுருவின் மனைவி காலை உணவை மேசைக்கு எடுத்திருந்தாள் அவர் சிறையால் வந்த பின்னரும் அவரது மனைவிக்கு திகில் விடுபடவில்லை. அவரை அதுபற்றியே திரும்ப திரும்ப ஏதாவது கேட்பாள் "ஏனப்பா அந்த இளந்தாரி நேவி காம்பை வீடியோ எடுத்ததெண்ட கதையெல்லாம் பொய்யே? வினாவினாள்.

"அதெல்லாம் சுத்தமான கட்டுக்கதை. 'காம்பிலை' 'கொன்ராக்ட்' வேலை ஒண்டு கூலி வேலை செய்யத்தான் அந்த பெடியன் போனவன் அங்கை வெவ்வேறு தொலைவு இடங்களில் நாளாந்தம் வேலை மாறி மாறி வரும். போ என்கிற இடத்துக்கு போக வேணும் பிள்ளைக்கு இடம் வலம் தெரியேல்ல. அதாலை கடதாசி ஒண்டிலை வேலைத்தளங்கள் இருக்கிற இடங்களை படமாய்க் கீறி வைச்சுது. இதனால் தான் எல்லா வில்லங்கமும் வந்தது.

இடியப்பத்தை பாற்சொதியுடன் இரசித்து சாப்பிட்டபடியே கூறி முடித்தார். ஆனால் அவருடைய நினைவெல்லாம் தனக்காக காத்திருக்கும் அந்த பெண் பற்றியே இருந்தது.

கையை அலம்பிவிட்டு நேரே அலுவலக அறைக்கு போனார்... 'என்னம்மா விசயம்'

'அது..பாருங்கோ என்னுடைய இவர் வெளிநாடு போய் ஒரு வருஷமாய் போச்சு. அகதி அந்தஸ்துக் கேட்டு விண்ணப்பிச்சிருக்கிறார். கேசுக்கு சில ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டி இருக்கு'

பிரச்சனையால் ஏற்பட்ட அவலங்களுக்கு அப்பால் எத்தனையோ பேர் வெளிநாடு சென்று தங்கள் தங்கள் நிலவரங்களை உயர்த்திக்கொண்டுவிட்டார்கள். அரசாங்க உத்தியோகம் என்று இங்க தங்கி விட்டவர்கள் பென்சனை எதிர்பார்த்து வேலையை தூக்கி எறிய மாட்டாதவராகப் போய்விட்டார்கள். இதற்கும் மேலாக தங்கள் மழலைச் செல்வங்களை சிறப்பாக வளர்த்து ஆளாக்க முடியாத அவர்கள் கஷ்டம் சொல்லி முடியாது.

பிரச்சனை எதுவும் இல்லாவிட்டால் அந்த வெளிநாட்டு உதவியுடைய பெண்மணிக்கு உதவி செய்ய குமரகுரு விரும்பினார். 'எறிகின்ற அகப்பையையும் சொருகி வைக்கவேணும்' என்று ஒரு பழமொழி இருக்கின்றது. அதுவும் இப்போது அவருக்கு நினைவு வந்தது.

'வெளிநாட்டிலை இருக்கிற உங்கள் கணவருக்கு நான் எப்படி அம்மா உதவி செய்வது?' அவருடைய கேள்விக்கு அந்த பெண் தெளிவாகவே பதில் கூறினாள். ஆனால், குமரகுருவுக்கு அதனை சரியாக கிரகிக்க முடியாத திகைப்பு. தனது பிடரியை வலது கரத்தால் தடவிவிட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு அவருக்கு வழங்கப்பட்ட 'உபசாரத்தில்' தலையில் ஏற்பட்டிருந்த கண்டலின் உக்கிரம் மனைவி கொடுத்த சுடுநீர் ஒத்தடத்தால் இப்போதுதான் சிறிதளவு குறைவடைந்து வருகின்றது. அவர் யோசிப்பதையும் பதில் எதுவும் கூறாததையும் கவனித்துவிட்டு அப்பெண் மீண்டும் கெஞ்சிக் கேட்டாள்

'ஐயா நாங்கள் அநாதைகள். எங்களுடைய பிள்ளைகள் மூவரும் போராட்டத்திற்கு போய்விட்டார்கள் என்று நீங்கள் உறுதிப்படுத்த வேணும்.'

இப்போ மறுவளம்! அவருடைய தலை சுற்றியது.

"ஐயோ எங்கடை சனம்!" என்று மட்டும் அவர் வாய் முணுமுணுத்தது!

# விசர் நாய்க்கு வந்த பல்வலி

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அன்பு நணபரொருவருவரின் 50 அகவைக்கான. கொண்டாட்டங்கள் முடிந்து கட்டிலில் கடுங்களைப்புடன் விழுந்தபோது நேரம் பின்னிரவு 2 மணியிருக்கும்.

சடுதியாய் முளிப்புவந்தபோது மேற்தாடையில் உள்ள வேட்டைப்பல் பயங்கரமாக வலியைத் தந்துகொண்டிருந்தது. வலியின் தீவிரம் கண்வரை நீண்டுசென்றது. என்னிடம் இருந்த வலிநிவாரண மாத்திரைகளில் 4 மாத்திரைகளை விழுங்கினேன். அப்போதும் வலி அடங்கியதாய் இல்லை. எனக்கு பல்வலி வந்தால் நான் கராம்பு சப்புவதுண்டு. அது வலியை குறைத்துவிடும் அல்லது சுகமாக்கும். எனவே கராம்பு சப்பினேன். வலி சற்றுக் குறைந்தாலும் தாங்கமுடியாத அளவிலேயே இருந்தது.

நேரத்தைப் பார்த்தேன் பின்னிரவு 3 மணி என்றது அது. பல்வைத்தியர் காலை 8 மணிக்குத்தான் தொழிலை ஆரம்பிப்பார் என்றது அவரது இணையத்தளம். 5 மணிநேரம் என்னால் இவ்வலியை தாங்கமுடியாதே என்று நினைத்துக்-கொண்டிருந்தபோதுதான் அந்த அற்புதமான காட்சி நினைவுக்கு வந்தது.

அது ஒரு ஆங்கிலப்படம். பெயர் மறந்துவிட்டது. Kevin Costner. கதாநாயகனாக நடித்தார் என்றே நினைக்கிறேன். ஒரு குதிரைப்படைச் சிப்பாய்க்கு கடும் பல்வலி கண்டுவிடும். அவர் அதை தாங்கமுடியாததால் படையில் இருக்கும் ஒரு வைத்தியரிடம் செல்கிறார். வைத்தியர் பல்லை பிடுங்கவேண்டும் என்பதால் அதற்கான நடவடிக்கைகளில் இறங்குவார். ஒரு குதிரை அழைத்துவரப்படும். நோயாளி படுக்கவைக்கப்படுவார். அவரது பல்லை ஒருவித உபகரணத்துடன் இணைத்துவிடுகிறார்கள். பின்பு அந்த உபகரணத்தை குதிரையின் சேணத்துடன் இணைத்தபின் குதிரையை தட்டிவிடுவார்கள். குதிரை பாயும் வேகத்தில் பல் களன்றுவிடும். இத்தனை வலியையும் தாங்குவதற்கு அந்த குதிரைப்படைச் சிப்பாய்க்கு வைத்தியர் பல்லை பிடுங்குவதற்கு முன்பே ஒரு மருந்து கொடுத்திருப்பார்.



அவருக்கு கொடுக்கப்பட்ட மருந்து ஒரு போத்தல் மது. சிப்பாய் அதை குடித்து மதிமயங்கிப்-போயிருக்கும்போதுதான் அந்த குதிரை ஓடுவதற்கு பணிக்கப்படும். குதிரை ஓட பல்வாயைவிட்டு வெளியே பறக்கும். அந்த வலியையும் அவர் தாங்கிக்கொள்வார்.

இந்தக் காட்சி மனதில் தோன்றியதும் நான் ***** போத்தலை தேடி எடுத்துக்கொண்டேன். பல்வலி தாங்கமுடியாததாய் இருந்தது. இடது பக்க கண்ணை திறந்துவைத்திருக்க முடியாதளவுக்கு விண் விண் என்று வலி தெறித்துக்கொண்டிருந்தது. போத்தலை திறந்து அப்படியே வாயினுள் சிறிது ***** விட்டு கொப்பளித்தேன். என்ன அதிசயம் வலி ஓரிரு நிமிடங்களுக்குள் நின்றுவிட்டது.

எனது முதலாம் வகுப்புப் புத்தகத்தில் "பாலா படம் பார், பாடம் படி" என்று இருந்தது. இதனாலோ என்னவோ எனக்கு பாடம் படிப்பதைவிட படம் பார்ப்பதிலேயே ஆர்வம் இருந்தது, இருக்கிறது. நான் படம் பார்ப்பதற்காக வாங்கிய திட்டுக்களும், பேச்சுக்களும், அடிகளும் அளவில்லாதவை. இப்படி நான் பார்த்த படம் ஒன்றில்தான் நான் குறிப்பிட்டகாட்சி வந்திருந்தது என்பது ஒரு வித முரண்நகை.

வலிகுறைந்தது. ஆனால் அரைமணிநேரத்தின் பின் மீண்டும் விண் விண் என்று வலியெடுத்தது. மீண்டும் அதே மருத்துவத்தை செய்தேன். வலி நின்றது. இப்படியே காலைவரையில் நேரத்தினை கடத்திக் கொண்டேன். பல்வைத்தியர் உடனேயே என்னை அழைத்தார். அற்புதமான ஒரு இருக்கையில் இருத்தி என்னை படுக்கவைத்தார். எனது தலைக்கு நேரே மேலே ஒரு கணிணி இருந்தது.

பல்லைச்சுற்றி ஊசி போட்டார். சற்றுநேரத்தில் பலவகையான ஆயுதங்களால் பல்லைக் குடைந்து பார்த்தார். கதிரியக்கப்படம் எடுத்தார். படத்தினை தலைக்கு மேலே இருந்த கணிணியில் காட்டியபடியே விளக்கினார். நான் வாயைத்திறந்து பேச முடியாத அளவிற்கு வாயினுள் உபகரணங்கள் இருந்தன. எல்லாவற்றிற்கும் ம் ம் என்றேன். 1 மணிநேரமாக போராடியபின் மீண்டும் ஒருமுறை வந்து இப்பல்லின் பிரச்சனைகளை சரி செய்துகொள். இப்போது நான் செய்திருப்பது தற்காலிக நிவாரணம் என்று கூறி கையில் தனது சேவைக்கட்டணம் 1800 குறோணர்கள் (300 டாலர்கள்) என்ற போது எனது மனம் 1800 குறோணருக்கு நான் 4 போத்தல் ***** வாங்கலாமே என்று கணக்குப்பார்த்தது என்பதை நான் மறைப்பதற்கில்லை.

**இனிமேல்தான் கதையின் கிளைமாக்ஸ் வருகிறது.**

சம்பவம் நடந்த அன்று மதியம் அன்பு நணபரொருவர் தொலைபேசியில் அழைத்தார். எனக்கு பல்வலி இப்போது உரையாட முடியாது நாளை எடுங்கள் என்றேன். மறுநாள் எடுத்தார்.

தொடரும்...

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தர் ஒரு சிங்கள எதிர்க்கட்சித் தலைவர் போலவா செயற்படப் போகிறார்!?

சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராகியதன் மூலம் சாதிக்கப் போவது என்ன? இக்கேள்விக்குரிய பதில் மற்றிரு-கேள்விகளில் இருந்தே தொடங்குகிறது. முதலாவது கேள்வி, அவர் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட-தற்கான உள்நாட்டுப் பின்னணி எது? இரண்டாவது கேள்வி அவர் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு-செய்யப்பட்டிருக்கும் பிராந்திய மற்றும் அனைத்துலக பின்னணி எது?

முதலாவது கேள்வி. அவர் எதிர்க்கட்சித் தலைவராக ஏன் தெரிவுசெய்யப்பட்டார்? ஏனெனில் யார் எதிர்க்கட்சி? யார் ஆளும் கட்சி? என்று துலக்கமாகக் கூற முடியாத ஒரு வித கலங்கலான நிலை நாடாளுமன்றத்தில் தோன்றியுள்ளது. சரி. அப்படி ஒரு நிலை தோன்றக் காரணம் என்ன?

காரணம் - ஜனவரி 08 ஆம் திகதி நிகழ்ந்த ஆட்சி மாற்றம்தான் அந்த ஆட்சி மாற்றமானது ஆளும் கட்சிக்கு எதிராக அக்கட்சி ஆட்களையே திருப்பியதால் ஏற்பட்ட ஒன்று. ஆயின் அடுத்த கேள்வியைக் கேட்கலாம். ஆட்சி மாற்றத்திற்குக் காரணம் என்ன? அல்லது அதற்கான தேவை என்ன?

யுத்த வெற்றிவாதம் தான் காரணம். யுத்த வெற்றி வாதமானது சீன விரிவாக்கத்திற்கு வழிகளை இலகுவாக்கிக் கொடுத்ததன் மூலம் தன்னை இலங்கைத்தீவில் நிரந்தரமாக ஸ்தாபித்துக் கொள்ளமுற்பட்டது. வெற்றி வாதத்தை அதன் பங்காளிகளை வைத்தே தோற்கடிக்க வேண்டிய தேவை அமெரிக்க இந்தியபங்காளி-களுக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக ஏற்பட்டதுதான் இப்போதிருக்கும் நாடாளுமன்றம். அதாவது ஆளும் கட்சி எது? எதிர்க்கட்சி எது? என்று கண்டுபிடிக்க முடியாத ஒரு கலங்கலான நாடாளுமன்றம். இப்படிப்பார்த்தால் இப்போதிருக்கும் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் யுத்த வெற்றிவாதம்தான்.

யுத்த வெற்றிவாதம் என்றால் என்ன? அது பேரினவாதத்தின் 2009 ஆம் ஆண்டிற்குரிய புதிய வடிவம். எனவே முதலாவது கேள்விக்குரிய விடையை பின்வருமாறு பொழிவாகச் சொல்லலாம். பேரினவாதத்தின் ஒரு கட்ட உச்சவளர்ச்சியின் விளைவின் விளைவே இப்போதுள்ள நாடாளுமன்றம் எனலாம். அதாவது சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக வந்தமை என்பது இலங்கைத் தீவின் ஜனநாயக மாண்பின் வெளிப்பாடு அல்ல. மாறாக இனவாதத்தின் விளைவாக கோறையாகிப் போன ஒரு ஜனநாயகக் கட்டமைப்பின் விளைவே இது.

எனவே சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவ-ராகியமை என்பது பேரினவாதத்தின் விளைவின் விளைவுதான். சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியாத அளவிற்கு குழம்பிப் போய்க் காணப்படுகிறது. இதை இன்னொருவிதமாகச் சொன்னால் அது எதிர்க்கட்சியாகச் செயற்படும் பலத்தை இழந்து காணப்படுகின்றது. சரியாக 38 ஆண்டுகளுக்கு முன்னரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியாத நிலை வந்தபோதே தமிழர் ஐக்கியவிடுதலைக் கூட்டணி எதிர்க் கட்சியாக தெரிவு செய்யப்பட்டது. இவ்விரண்டு தெரிவுக-ளுக்குமிடையே சில ஒற்றுமைகளும் உண்டு. வேற்றுமைகளும் உண்டு.

முதலில் ஒற்றுமைகளைப் பார்க்கலாம். இரண்டு சந்தர்ப்பங்களிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இயலாமையே தமிழ்த்-தரப்புக்குச் சாதகமாக அமைந்தது. 1971இல் ஜே.வி.பி.யின் முதலாவது கிளர்ச்சியை சிறிமாவோ குரூரமாக நசுக்கினார். அதன் பின் 1975 இல் நடத்தியிருக்க வேண்டிய தேர்தலை இரண்டு ஆண்டுகள் ஒத்திவைத்தார். அவருடைய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகக் கோபமும் விரக்தியுமுற்றிருந்த சிங்களவாக்காளர்-களை ஜெயவர்த்தனா தன்வசப்படுத்தினார். அதுகெடுபிடிப் போர்க்காலம். திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் பிரதிநிதியாகக் காணப்பட்ட ஜெயவர்த்தனா சிறிமாவோவை மிக மோசமாகத் தோற்கடித்தார். ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சி நசுக்கப்பட்டு சரியாக ஆறு ஆண்டுகளின் பின் நடந்த தேர்தல் அது.

1977 இல் ஜயவர்த்தனா மிகப் பெரும் வெற்றியைப் பெற்றார் அவருக்கு 140 ஆசனங்கள் கிடைத்தன. ஆனால் சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு எட்டு ஆசனங்களே கிடைத்தன. அதேசமயம் தமிழர் ஐக்கியவிடுதலைக் கூட்டணிக்கு 18 ஆசனங்கள் கிடைத்தன. இது முதலாவது ஒற்றுமை.

இரண்டாவது ஒற்றுமை. இரண்டு மாற்றங்-களின் பின்னணியிலும் மேற்குநாடுகளே இருந்தன என்பது. ஜெயவர்த்தனா மேற்கின் செல்லப்பிள்ளை. அவருடைய மருமகனான ரணில் இப்பொழுது மேற்கின் கருவியாகி மாற்றத்தை முன்னெடுக்கிறார். இரண் ்தல் வெற்றிகளின் போதும் மேற்குநாடுகளின் நிகழ்ச்சி நிரல்களே பெருமளவிற்கு வெற்றி பெற்றன. இவை ஒற்றுமைகள். இனி வேற்றுமைகளைப் பார்க்கலாம்.

1977 இல் இரு துருவ ஒழுங்கு நிலவியது. அப்பொழுது இந்தியாவும் அமெரிக்காவும் பூகோளப் பங்காளிகள் அல்ல. ஆனால் இப்பொழுது மல்ரிபிளக்ஸ் உலக ஒழுங்கு உருவாகி வருகிறது. இதில் இந்தியாவும் அமெரிக்காவும் பூகோளப் பங்காளிகளாகக் காணப்படுகின்றன. இது ஒருவேற்றுமை.

அடுத்தது, ஆளும் கட்சிஎது? எதிர்க்கட்சி எது என்று கண்டுபிடிக்க முடியாத ஒருகட்சிச் சூழல் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது 1977ல் தமிழர் தரப்பு நாடாளுமன்றுக்குள் நுழைந்த போது பெற்றிருந்த மக்களாணைக்கும் இப்போது கிடைத்திருக்கும் மக்களாணைக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. 1977 இல் தேர்தல் நடப்பதற்கு ஓராண்டுக்கு முன்பு 1976 இல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றபபட்டது. ஒற்றையாட்சிக்கு எதிராக பிரிவினை கோரும் அத்தீர்மானத்தை முன்வைத்து பெறப்பட்ட மக்களாணையோடு தான் அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்திற்குள் வந்தார். அப்பொழுது சம்பந்தர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அப்பொழுது தமிழர் ஐக்கியவிடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த மக்களாணையானது மிகத் துலக்கமானது, மிகக் கூரானது. காலமுக்கியத்துவம் மிக்கது. அப்படி ஒரு மக்களாணையோடு நாடாளுமன்றத்திற்குள் வந்த ஒரு கட்சி திட்டவட்டமான எதிர்ப்பு அரசியலையே முன்னெடுத்திருக்கமுடியும்.

ஆனால் இப்பொழுது நிலைமைகள் அவ்வாறல்ல. கடந்த ஆறு ஆண்டுகளாக கூட்டமைப்பின் உயர் பீடமானது படிப்படியாக ஒருவித இணக்க அரசியலை நோக்கியே நகர்ந்துவருகின்றது. எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றபின் சம்பந்தர் பி.பி.சி சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் திட்டவட்டமாக அதை அழுத்திக் கூறுகிறார். ஒருசிங்கள அரசியல்வாதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் எப்படி நடந்து கொள்வாரோ அப்படியே தானும் நடந்துகொள்ளப் போவதாக அவர் கூறுகிறார். ஒற்றையாட்சிக்கு எதிராக பிரிவினை கோரப் போவதில்லை எனவும் அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

இப்படிப் பார்த்தால் தமக்குக் கிடைத்த மக்களாணையை 1977 இல் அமிர்தலிங்கம் வியாக்கியானப் படுத்தியதற்கும் இப்பொழுது சம்பந்தர் வியாக்கியானப் படுத்துவதற்குமிடையே பெரிய வேறுபாடுகள் உண்டு. இது மூன்றாவது வேற்றுமை.

நான்காவது வேற்றுமை 1977ல் ஆயுதப் போராட்டம் தலைமறைவாக இருந்தகால கட்டத்தில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். இப்பொழுது அந்த ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு ஆறாண்டுகள் ஆகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளில் ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இனப்பிரச்சினை முன்னெப்-பொழுதையும் விட அதிகரித்த அளவில் அனைத்துலக மயப்பட்டிருக்கும் ஒரு அரசியல சூழலில் சம்பந்தர் புதிய பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

இவை யாவும் 1977 இற்கும் 2015 இற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள். இனி இக்கட்டுரையின் தொடக்கத்தில் கேட்கப்பட்ட இரண்டாவது கேள்விக்குப் போகலாம். அதாவது எத்தகைய ஓர் அனைத்துலக மற்றும் பிராந்திய சூழலின் பின்னணியில் சம்பந்தர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்? இது தொடர்பில் ஏற்கனவே இக்கட்டுரையில் ஓரளவு விவாதிக்கப்பட்டுவிட்டது. அமெரிக்க இந்திய கூட்டுப் பங்காளிகள் இலங்கைத் தீவில் ஆட்சி மாற்றத்தை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்குப் பலப்படுத்த முற்படுகிறார்கள். ஆட்சிமாற்றத்தால் ஏற்பட்டிருக்கும் புதியவலுச் சமநிலையை நாட்டுக்குள் இருக்கக் கூடிய எந்த ஒருதரப்பும் குழப்பிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வோடு காய்கள் நகர்த்தப்படுகின்றன.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவாத சக்திகளோ அல்லது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இலட்சியப் பற்றுள்ள சக்திகளோ நிலைமைகளைக் குழப்ப-வில்லை என்றால் இப்போதிருக்கும் வலுச்சமநிலை பெருமளவிற்குத் தளம்பாது. தென்னிலங்கையில் இனவாதிகளுக்குத் தலைமைதாங்கக் கூடிய மகிந்தவை ஏற்கனவே ஒரு கட்டம் வரை முடக்கியாயிற்று. போர்க்குற்றம் தவிர மற்றொல்லாக் குற்றங்களையும் சுமத்தி ராஜபக்ஸ குடும்பத்தவர்களை ஒரு வித பீதியில் வைத்திருப்பதற்கான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதாவது நாடாளுமன்றத் தேர்தலின் பின் ராஜபக்ஸ சகோதரர்கள் முன்னெப் பொழுதையும் விட கூடுதலாக தற்காப்பு நிலைக்குச் செல்லத் தள்ளப்பட்டிருக்-கிறார்கள்.

ராஜபக்ஸ சகோதரர்களைத் தோற்கடிக்கும் வரையிலும் தமிழ் மக்களின் இழப்புக்க-ளையும் காயங்களையும் அனைத்துலக மயப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கு இருந்தது. ஆனால் இப்பொழுது அத்தேவை இல்லை என்பது மட்டுமல்ல அனைத்துலக விசாரணைப் பொறிமுறை என்றவொரு விவகாரத்தை முன்வைத்தே தெற்கில் உள்ள இனவாத சக்திகள் மறுபடியும் பலமடையக் கூடும் என்ற ஓர் அச்சம் அமெரிக்க இந்திய பங்காளிகள் மத்தியில் உண்டு. எனவே, இப்பொழுது அவர்களுக்குத் தேவை எவ்வளவுக்கு எவ்வளவு ஈழத்தமிழர் விவகாரத்தை அனைத்துலக மயநீக்கம் செய்யலாம் என்பதுதான். கடந்த சிலதசாப்தங்களாக குறிப்பிடத்தக்க அளவிலும் குறிப்பாக கடந்த ஆறு ஆண்டுகளாக அதிகரித்த அளவிலும் அனைத்துலக மயப்பட்டு விட்ட ஒரு விவகாரத்தை பின்னோக்கிச் செலும் ஒரு பொறிமுறைக்கூடாக அனைத்துலக மயநீக்கம் செய்வது அல்லது உள்ளூர் மயப்படுத்துவது என்பது மேற்கத்தேய இந்தியப் பங்காளிகள் நினைப்பதைப் போல அவ்வளவு சுலபமானது அல்ல.

அனைத்துலக மயப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் விவகாரத்தை அனைத்துலக விசாரணைப் பொறிமுறை என்ற ஓர் இறுதி இலக்கை நோக்கி நகர்த்துவதன் மூலம் தான் ஈழத்தமிழர்கள் தங்களுக்குரிய நீண்ட எதிர்கால கவசங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். முன்பொரு தடவை கூட்டமைப்பினர் தென்னாபிரிக்க பிரதிநிதிகளைச் சந்தித்தபொழுது அவர்களில் ஒருவர் பின்வரும் தொனிப்பட ஆலோசனை கூறினாராம்.

அனைத்துலக நீதி உடனடியாகக் கிடைக்குமோ இல்லையோ அப்படி ஒரு விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அப்படிக் கொண்டு சென்றால் அது எப்பொழுதும் சிங்கள பௌத்த இனவாதத்தின் தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தியைப் போல் இருக்கும் என்ற தொனிப்பட.

ஆனால் ஒருசிங்கள எதிர்க்கட்சித் தலைவரைப் போல செயற்படப் போவதாக சூழுரைத்திருக்கும் சம்பந்தர் இனப் பிரச்சினையை அனைத்துலக மயப்படுத்துவாரா? அல்லது அனைத்துலக மயநீக்கம் செய்வாரா? பண்ணாகத்தில் வைத்து வட்டுக்-கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியபின் செல்வநாயகம் திருமலைக்குச் சென்றிருக்கிறார்.

அங்கே சம்பந்தர் அவரிடம் நீங்கள் இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் மூவினச் சூழலுக்குள் வாழும் நாங்கள் எப்படி அதை எதிர்கொள்வது? என்ற தொனிப்பட கேள்வி கேட்டவராம்.

அண்மையில் தென்னிலங்கையில் வாழும் தொழிற்சங்கவாதியான ஒரு நண்பர் சொன்னார்..... அண்மைத் தசாப்தங்களில் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய எல்லா தலைவர்களோடும் ஒப்பிடுகையில் சிங்கள வெகுசனத்தால் ஆர்வத்தோடு பார்க்கப்படும் ஒரு தமிழ்த் தலைவராக சம்பந்தர் உருவாகி வருகிறார் என்று.

எனவே எட்டாவது நாடாளுமன்றத்தின் மிக மூத்த அரசியல்வாதிகளில் ஒருவராகிய சம்பந்தர் இனப்பிரச்சி-னையை கூடிய மட்டும் அனைத்துலக மயநீக்கம் செய்வதன் மூலம் அமெரிக்க இந்திய பங்காளிகளின் இதயங்களிலும் சிங்கள பொதுசனங்-களின் இதயங்களிலும் வீற்றிருக்க-முயல்வாரா? அல்லது அனைத்துலக விசாரணை ஒன்றுக்குரிய நிலைமை-களைக் கூடியமட்டும் கனியச் செய்வதன் மூலம் தனக்கு வாக்களித்த மக்களின் இதயங்களில் வீற்றிருக்க முயல்வாரா?



**நிலாந்தன்**

- www.globaltamilnews.net -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழப்பங்களின் போது ஒரு முஃமின்

பஹ்ரைனில் இருந்து கிடைக்கப்பெற்ற பொருட்களை வழங்குவதற்காக அன்ஸாரிகளை நபி (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் செல்வத்தில் இருந்து ஏதாவது வழங்குகின்றபோது குரைஷியர்களான எமது சகோதரர்களுக்கும் அவ்வாறு கொடுங்கள் என்றார்கள். அவர்களுக்கு வழங்குவதற்கென நபி (ஸல்) அவர்களிடம் எதுவும் இருக்கவில்லை. நீங்கள் எனக்குப் பின்னால் தகுதி இன்றி தராதரம் உரிமை வழங்கப்படும் நிலைகளைக் காண்பீர்கள். நீங்கள் என்னை சந்திக்கின்றவரை பொறுமையாக இருங்கள் எனக் கூறினார்கள். (புகாரி)

புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் வேறு அறிவிப்புக்களில் என்னை நீங்கள் ஹவ்ள் தடாகத்தின் அருகில் சந்திக்கின்ற வரைக்கும் பொறுமையாக இருங்கள் என இடம் பெற்றுள்ளதைப் பார்க்கின்றோம்.



### குழப்பங்கள் பற்றிய முன்னறிவிப்புக்கள்

அறிவு கைப்பற்றப்படும். நில அதிர்வுகள் அதிகரிக்கும், காலம் நெருங்கும் (சுருங்கும்), குழப்பங்கள் அதிகரிக்கும், கொலைக் காலசாரம் அதிகரிக்கும், செல்வம் பெருகிவழியும் நிலை வராமல் மறுமைநாள் ஏற்படாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

இந்த நிலையை மனிதர்கள் உணரவே செய்கின்றனர். 1500 வருடங்களுக்கு முன்னால் அறிவிக்கப்பட்ட முன்னறிவிப்புக்கள் நபித்துவத்தின் உண்மையை உலகுக்கு பறைசாட்டும் முக்கிய செய்திகள் என்பதை நாம் அறிவோம்.

நபியின் அந்தரங்க செயலாளர் என அறியப்பட்ட ஹுதைபா இப்னுல் யமான் (ரழி) அவர்களிடம் இரண்டாம் கலீ:.பா உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் குழப்பங்கள் பற்றி நபிகள் நாயகம் அவர்கள் கூறியது பற்றி அறிக்குமாறு கேட்டபோது ஹுதைபா அவர்கள்......

தொடரும் .. ..

– எம்.ஜே.எம். றிஷ்வான் –

# திருச்சபையின் வரலாறு

கடந்தவாற தொடர்ச்சி .. ..



இவற்றை அப்போலஜிஸ்ட் (Apologists) என்று அழைப்பர். இக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிட்டுக் கூறக்கூடிய அப்போலஜிஸ்டாக ஜஸ்டின் மார்டர் (Justin Martyr) இருந்தார். இவர் சிறந்த கிறிஸ்தவராகவும், படிப்பதில் அதிக ஆர்வமுள்ளவராகவும் இருந்தார். இவர் பாலஸ்தீனத்தில் சிக்கம் என்ற இடத்தில் கி. பி. 100 இல் பிறந்து பின்பு ரோமப் பேரரசனான மார்கஸ் அவுரேலியஸின் ஆட்சிக் காலத்தில் ரோமில் கி. பி. 163 இல் கொல்லப்பட்டார். கிறிஸ்தவ விசுவாசத்தை விளக்கியும் ஆதரித்தும் இவர் தனது முதலாவது ஆக்கத்தை ரோம பேரரசனான அன்டோனியஸ் பயஸீக்கும், செனட்டுக்கும் ரோமாபுரி மக்களுக்கும் அனுப்பினார். இரண்டாவதாக இவர் எழுதிய ஆக்கம் முதலாவதைவிட சுருக்கமானதாகவும் செனட்டுக்கு மட்டும் எழுதப்பட்டதாக இருந்தது. இவருடைய நீண்ட ஆக்கமாக, டீரைப்போ என்ற யூதனுடனான கலந்துரையாடல் (Dialogue with Trypho the Jew) என்ற நூல் இருந்தது. இது கிறிஸ்தவ விசுவாசத்தை யூதர்களுக்கு விளக்கி ஆதரித்து எழுதப்பட்டதாக இருந்தது. ஜஸ்டின் மார்டர் வேற்று தெய்வங்களை வணங்கிய மனிதனாகப் பிறந்து கடவுளை நாடி அலைந்தவராக இருந்தார். தத்துவத்தில் ஆர்வம் கொண்டு அதையும் படித்தார். ரோம், எதென்ஸ், அலெக்சாந்திரியா போன்ற இடங்களுக்கெல்லாம் பிரயாணம் செய்தார் எபேசுவில் கடற்கரையோரம் ஒருநாள் நடந்து போய்க் கொண்டிருந்தபோது ஒரு வயதான மனிதன் கிறிஸ்துவைப் பற்றியும் விசுவாசத்தைப்பற்றியும் ஜஸ்டினுக்கு விளக்கி கர்த்தரிடம் வழி நடத்தினார். அன்றே ஜஸ்டின் கிறிஸ்துவை அறிந்து கொண்டார்.


கிறிஸ்தவத்தை ஆதரித்து எழுதிய தன்னுடைய முதலாவது நூலில் ஜஸ்டின், கிறிஸ்தவத்திற்கு எதிரான தவறான குற்றச்சாட்டுகளை நிராகரித்து எழுதினார். கிறிஸ்தவர்களுடைய ஞாயிறு ஆராதனை முறையையும் இதில் விளக்கியிருந்தார் ஜஸ்டின். ஞாயிறு தினத்தில் கூடிக் கீர்த்தனைகள் பாடுவதும், ஜெபிப்பதும், பிரசங்கம் செய்வதும், அதைக் கேட்பதும், அப்பம் பிட்குதலுமே அன்று கிறிஸ்தவ ஆராதனை முறையாக இருந்ததை ஜஸ்டினின் நூலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இன்று ஆராதனை என்ற பெயரில் அநேகர் செய்து வரும் அட்டகாசங்களுக்கு இரண்டாம் நூற்றாண்டு சபைகளில் இடமிருக்கவில்லை.

தொடரும் .. .. www.bible.me

# ஆரோக்கியமாக வாழ வேண்டுமா?

இன்றைய நவீன காலத்தில் பலரும் தங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க அக்கறை காட்டுவதில்லை. இதன் காரணமாக பல்வேறு உபாதைகளினால் பாதிக்கப்படுகின்றனர்.

சத்தான உணவுவகைகள், சீரான உடற்பயிற்சி மற்றும் முறையான பழக்கவழக்கங்களினால் நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.



### தண்ணீர் அருந்துங்கள்

உடல் என்பது கோயில் போன்றது, நாம் தான் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும், எனவே அதிகளவு தண்ணீர் அருந்துங்கள். இது உடலில் இருந்து வெளியேறும் நீரின் அளவை சமன் செய்ய உதவும். மேலும் உடலின் செயல்கள் சீராக நடைபெறவும் உதவும்.

### முறையான தூக்கம்

அடுத்ததாக முறையான தூக்கம் என்பது அவசியமான ஒன்றாகும். தூக்கமின்மை பல்வேறு பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும் என்பதோடு விரைவில் முதுமை அடையச் செய்யும். எனவே தினமும் குறைந்தது 6 மணி நேர தூக்கமாவது அவசியம்.

### தியானம் செய்யுங்கள்

அதேபோல் தியானம் செய்யுங்கள். இது எப்போதும் உங்கள் மூளைக்கு ஓய்வு தருவதுடன் உங்கள் மனதையும் அமைதியாக வைத்திருக்க உதவும்.

தொடரும் .. ..




*லெக்ஸரர்: எப்படி உன்னால் இப்படி ஒரு ஆராய்ச்சியை செய்ய முடிந்தது?*

மாணவன் : நீங்க தந்திருந்த இறுதித் திகதி தான் காரணம் சார்.







*பஸ்ஸில்....*

எங்கே போகணும்?

அதோ சுடிதார் போட்டிருக்கும் அவள் அருகில் செல்ல வேண்டும். வழி விடுங்கோ!!!!

# பிரிவு – சேர்வு

காதலியை பிரிந்திருக்கும்போது, அவள் பெயரை மற்றொரு இடத்தில் கேட்டாலே மனதில் ஒருவித படபடப்பான இன்பம் வந்துபோகும். தொலைதூர காதலில் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் காதலும், அக்கறையும் அன்பும் மட்டுமே எதிரொலிக்கும். அதனால், சண்டை சச்சரவுகளுக்கு இடம் இருக்காது.

தினம் தினம் சந்தித்து காதலை வெளிப்படுத்தும்போது காதலும், காதலியும் அழகாகத் தெரிவாள், ஆனால் பிரிவில் இருக்கும்போது காதல் மட்டுமே அழகாகத் தெரியும். பல நாட்கள் பிரிந்திருந்து விட்டு, பின்னர் சந்திக்கும் போது வெளிப்படுத்தும் அன்புக்கு விலைமதிப்பில்லை. அப்போது ஒருவர் மேல் ஒருவர் காட்டும் அன்புக்கு அணையிட முடியாது. சேர்த்து வைத்த அனைத்து ஆதங்கத்தையும் ஒரே கட்டிப்பிடிப்பில் தெரிவிக்கும் அச்சுகத்தை வேறு எதுவும் ஈடு கொடுக்காது.

முற்றும் .. ..

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபட வேண்டாம். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கலாம். உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



**ரிஷபம்** : உறவினரிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். அறிமுகம் இல்லாதவர்களிடம், அதிக நெருக்கம் வேண்டாம்.



**மிதுனம்** :சாதுரியமாகச் செயல்பட்டு, குடும்ப பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். பேச்சிலும், செயலிலும் உண்மை நிறைந்திருக்கும் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும்.



**கடகம்** : வாழ்வில் வளர்ச்சி காண்பீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வீடு தேடி வரும். வீடு, வாகனம் வாங்க யோகமுண்டு. கருத்து வேறுபாடு நீங்கும்.



**சிம்மம்**: வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. சகோதரர்களின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள்.



**கன்னி** :உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. மருத்துவச் செலவு செய்ய நேரிடும். கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடி வரும்.



**துலாம்** : கௌரவத்திற்காக ஆடம்பர செலவு செய்வீர்கள். எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது.



**விருச்சிகம்** :சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுவீர்கள். சகோதரர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு உண்டாகும்.



**தனுசு** :குடும்பத்தில் சுபவி'யம் குறித்த பேச்சு துவங்கும். மனதில் புத்துணர்வு மேலோங்கும். மறைமுக எதிரிகளை இனங்கண்டு ஒதுங்குவீர்கள். வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக அதிகரிக்கும்.



**மகரம்** : மற்றவர் வி'யங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. செலவில் சிக்கனத்தை பின்பற்றி சேமிப்புக்கு வழிகாண்பீர்கள். சகோதரர் வழியில் கருத்து வேறுபாடு உண்டாகும்.



**கும்பம்** : மனதில் தைரியம் அதிகரிக்கும். பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினரைக் குறை சொல்ல வேண்டாம்.



**மீனம்** :புதியவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். ஆரோக்கியம் பலமாகும் வியாபாரத்தில் லாபம் கிட்டும். பணிச்சுமைக்கு ஆளானாலும், ஆதாயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

### கோழிக் கூட்டு

**தேவையான பொருட்கள்**

கோழி இறைச்சி - 500 கிராம், வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 2, வர மிளகாய் - 4, இஞ்சி - பூண்டு விழுது 1 தே.கரண்டி, மிளகு - 1 தே.கரண்டி, சீரகம் - 1 தே.கரண்டி, சோம்பு - 1 தே.கரண்டி, மஞ்சள் பொடி - 1 தே.கரண்டி, கறிவேப்பிலை - தேவையான அளவு, எண்ணை - 3 மே.கரண்டி, பட்டை, இலை - தாளிக்க

**செய்முறை**

இறைச்சியை நன்கு கழுவி சிறிய துண்டுகளாக வெட்டி இருநூறு மி.லி தண்ணீர் விட்டு முக்கால் பதத்திற்கு வேக வைக்க வேண்டும். தண்ணீர் முழுவதும் சுண்டி விட வேண்டும். பின்னர் மிளகு, சீரகம், சோம்பு, வர மிளகாய் நான்கையும் பத்து நிமிடம் ஊற வைத்து ஒரு மே.கரண்டி உப்பு சேர்த்து விழுதாக அரைத்து இறைச்சியில் போட்டு பிசறி அரை மணி நேரம் வைக்க வேண்டும். வெங்காயத்தை நீள நீளமாகவும், பச்சை மிளகாயை சிறிது சிறிதாகவும் நறுக்கி வைக்க வேண்டும். அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் ஊற்றி பட்டை இட்டு தாளிக்க வேண்டும். வாசனை வந்ததும் வெங்காயம் போட்டு வதக்கி, சிவந்ததும் ப.மிளகாய், கறிவேப்பிலை போட வேண்டும். இரண்டு நிமிடம் கழித்து இஞ்சி - பூண்டு விழுது, ம.பொடி, ஒரு தே.கரண்டி உப்பு மூன்றையும் சேர்த்து வதக்க வேண்டும். வதங்கியதும் ஈரல் கலவையைப் போட்டு ஐந்து நிமிடம் வதக்கி, அரை டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பை குறைத்து வைக்க வேண்டும். அடிக்கடி திறந்து கிளறி விட வேண்டும். தண்ணீர் வற்றியதும் இறக்க வேண்டும்.




## பார்வைக் கோளாறு குணமடையும்:

இலைகளின் பால் சாறு காயங்களின் மேல் பூசப்படுவதால் வீக்கம் குறையும். கண்நோய்களிலும் உதவுகிறது.

நந்தியாவட்டப் பூ வானது நேந்திரகாசம், படலம் லிங்க நாச தோஷங்கள், சிரஸ்தாப ரோகம், ஆகியவற்றைக் கெடுக்கும். இதில் ஒற்றைப் பூ இரட்டைப் பூ என்கின்ற இரண்டு இனமுண்டு. இரண்டும் ஒரே குணமுடையவை.

கண்களில் உண்டான கொதிப்புக்கு இதை கண்களை மூடிக்கொண்டு மிருதுவாக ஒற்றடம் கொடுக்கக் கண் எரிச்சல் நீங்கி குளிர்ச்சியாகும்.

நந்தியா வட்டைப்பூவும் தேள் கொடுக்கிலையும் ஓர் நிறையாகக் கசக்கிக் கண்களில் இரண்டொரு துளி விட்டுக் கொண்டு வர சில தினத்தில் கண்களில் காணும் பூ எடுபடும்.



மலர்களின் சாறு எண்ணெய் கலந்து பயன்படுத்தும் போது எரிச்சல் உணர்வை மட்டுப்படுத்தும். இதன் பூக்கள் வாசனையூட்டும் பொருளாகப் பயன் படுகின்றது. இது நிறத்திற்கும் பயன்படுகிறது. இதிலிருந்து அழியாத மை தயார் செய்கிறார்கள்.

நந்தியா வட்டப் பூ 50 கிராம், களாப் பூ 50 கிராம் 1 பாட்டிலில் போட்டு நல்லெண்ணெயில் ஊறவைத்து 20 நாள்கள் வெயிலில் வைத்து வடிகட்டி ஓரிரு துளி காலை மாலை கண்ணில் விட்டுவர பூ, சதைவளர்ச்சி, பல வித கண் படலங்கள், பார்வை மந்தம் நீங்கும்.

## முகத் தழும்புகள் மறைய

சிலருக்கு விபத்து, அலர்ஜி போன்றவைகள் மூலம் முகத்தில் தழும்புகள் ஏற்படக்கூடும். இனினும் கவலை வேண்டாம் அவற்றை எளிதாக போக்க பல வழிகள் உள்ளன.

☞ சந்தனப் பவுடருடன் பன்னீர் அல்லது பாலை கலநது, முகத்தில் பூசி வரவேண்டும். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரினை கொண்டு முகத்தை கழுவ வேண்டும்.

☞ இதேபோல் இரவு தூங்குவதற்கு முன்னர் தண்ணீர் அல்லது பாலில் பாதாம் பருப்பை ஊற வைக்கவேண்டும். பின்னர் அதன் தோலை உரித்து அரைக்க வேண்டும். அதனுடன் பன்னீர் கலந்து தழும்புகளின் மீது தடவி வந்தால் நாளடைவில் சரியாகும்.

☞ ஆலிவ் எண்ணெய்யில் பல நன்மைகள் அடங்கியுள்ளன. தழும்புகளில் மீது ஆலிவ் எண்ணெய்யை தடவி பின்னர் மெல்லிய சூட்டில் ஆவி பிடிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்துவந்தால் தழும்புகள் மற்றும் முகத்தில் உள்ள துளைகள் மறையும்.

☞ எலுமிச்சையில் உள்ள வைட்டமின் சி தழும்புகளை மறைய செய்யும் ஆற்றல் நிறைந்தது. எனவே எழுமிச்சை சாற்றை முகத்தில் பஞ்சை கொண்டு ஒற்றி எடுத்துவந்தால் நல்ல பலன் தரும்.

☞ பேக்கிங் சோடாவுடன் நீரினை கலந்து தழும்புகளின் மீது ஸ்கரப் செய்யுங்கள். அதனை நன்றாக தேய்க்க வேண்டும். பின்னர் சில நிமிடங்கள் கழித்து மிதமான சுடுநீர் கொண்டு கழுவ வேண்டும். இவ்வாறு செய்துவந்தால் நாளடைவில் உங்கள் முகத் தழும்புகள் மறைந்துவிடும்.

## ஆண்களுக்கும் அழகு

**அழகு குறிப்பு**

பெண்களைப் போலவே ஆண்களும் அழகியல் கொள்ள வேண்டும். ஏனெனில் பெண்களை விட ஆண்களே அதிகம் வெளியில் செல்கின்றனர். ஆடைகளில் காட்டும் அக்கறையை முகத்தை அழகுபடுத்த காட்டுவதில்லை.

வேலை நிமித்தமாக வெளியில் சுற்றும் ஆண்களின் முகம் எளிதில் கருத்துவிடும். அவர்கள் ஐஸ் கட்டியை துணியில் கட்டி முகத்திற்கு ஒத்தடம் தர முகம் பொலிவடையும்.

வெளியில் அலைவதனால் தலைமுடி உதிர்வதை தடுக்க நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய மூன்றையும் கலந்து தலைக்கு தேய்த்து வர முடி உதிர்வது தடுக்கப்படும்.

சிகரெட் குடித்து உதடு கருமையாக இருப்பவர்கள் மாதுளைச் சாறு, புதினா இலையை உதட்டில் தடவி வர உதடு செந்நிறமாகும்..



## சிறுவர் முரசு



**சிறுவர்களுக்கான குட்டிக் கதை**




### மீசைக்காகச் சண்டை

ஓர் ஊரில் முரடன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய மீசை வைத்திருந்தான். எப்போதும் தன் மீசையை முறுக்கியபடியே நடப்பான்.

அந்த ஊருக்கு புதிதாக உருவன் தன் குடும்பத்துடன் வந்தான். வந்தவனோ அந்த அவனை விட பெரிய மீசை வைத்திருந்தான்.

தன்னை விட பெரிய மீசையுடன் தன் எதிரிலே நடந்துவரும் அவனைப் பார்த்ததும் முரடனால் கோபத்தை அடக்க முடியவில்லை. அவனைப் பார்த்து, " நீ எப்படி என்னை விடப் பெரிய மீசை வைத்திருக்கலாம்?" என்று கேட்டான் முரடன். வைத்துக் கொண்டால் என்ன? என்று கேட்டான் அவன்."வீரத்தின் அடையாளம் தான் இந்த மீசை. நீ பெரிய மீசை வைத்திருப்பதால் என்னை விடப் பெரிய வீரன் என்று ஆகிறது. வா இருவரும் சண்டை போடுவோம். எவனுக்கு வெற்றியோ அவன் பெரிய மீசை வைத்துக்கொள்ளட்டும். அடுத்தவன் மீசையை எடுத்துவிட வேண்டும் என்றான் முரடன். சண்டையில் அந்த முரடனை வெற்றி கொள்ள முடியாது என்று நினைத்த அவன், "நாம் இருவருமே ஒருவருக்கு ஒருவர் இணையானவர்கள .சண்டை நடந்தால் நம்மில் ஒருவன் இறப்பது உறுதி. அப்படி நடந்தால் அவன் குடும்பம் என்ன கதியாகும்" என்று கேட்டான். "வேறு வழியில்லை அவன் குடும்பம் துன்பப்பட்டு தான் ஆக வேண்டும்" என்றான் முரடன். "ஏன் நாம் இறந்த பிறகு அவர்கள் துன்பப்பட வேண்டும். நாம் முதலில் அவரவர் மனைவி மக்களைக் கொல்வோம். பிறகு நாம் சண்டையிடலாம் என்றான் அவன். முரடனும் நல்ல திட்டம். வீடு சென்று முரடன் மனைவி மக்களை கொன்று போட்டான். மறுநாள் மாலை நேரம் வந்தது. புதிதாக வந்தவனுடன் கடுமையாகச் சண்டை செய்து அவனைக் கொன்று போட வேண்டும் என்று வெறியோடு காத்திருந்தான் முரடன். அப்போது அவன் எதிரில் வந்த எதிரியின் முகத்தில் மீசை இல்லை.



முரடனைப் பார்த்து 'கேவலம் ஒரு மீசைக்காகவா குடும்பத்தை கொல்வது? என்று நினைத்து மீசையை எடுத்து விட்டேன்.' என்றான் அவன். என்ன செய்வான் முரடன். தன் கையாலேயே மனைவி மக்களைக் கொன்று போட்டதற்காக அழுது புலம்பத் தொடங்கினான்.


- [illegible] -

**சிந்திக்க ....**

வசதி இல்லாமல் வறுமையில் வாழ்வதை மனது ஏற்றுக்கொண்டால், வறுமை நம் வாழ்வில் வசதியாக வாழ்ந்து சுகம் காணும்....



ஜெ.வதுர்ஷி
தரம் - 02, சேனையூர்




ம.திவ்யாஷன்,
மத்தியவீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. பெறுமானத்தைக் காண்க. 1/5 + 2/5
02. சுருக்குக. 0.1 x 0.1
03. 8 பேனைகளின் விலை ரூ.72 எனின் ஒரு பேனையின் விலையைக் காண்க
04. 4x=12 எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.
05. உருவில் 1/3 பகுதியை நிழற்றுக.



06. கூட்டுக : $11_{இரண்டு} + 10_{இரண்டு}$
07. 2,5,7,5,8 என்னும் தரவுக் கூட்டத்தின் ஆகாரம் யாது?
08. சமன்பாடு 3x + y - 5 =0 இனால் தரப்படும் நேர்கோட்டின் படித்திறனைக் காண்க.
09. ஒரு குறித்த வேலையை 4 மனிதர்கள் 5 நாட்களில் செய்து முடிப்பர் அதனைப் போன்ற இரு மடங்கு வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் தேவை?

### பகுதி 02

01. C யை மையமாகக் கொண்ட வட்டம் ஒன்றின் ஒரு விட்டம் AB ஆகும். AD//CE ஆக இருக்குமாறு வட்டத்தின் மீது கோடு AB யின் ஒரே பக்கத்தில் D,E என்னும் புள்ளிகள் உள்ளன. இத்தகவல்களைக் காட்டும் பரும்படி வரிப்படத்தை வரைந்து.

(1) $D\hat{C}E = B\hat{C}E$ எனவும்.

(2) ED, EB ஆகிய நாண்கள் சமம் எனவும்

(3) AE யினால் $D\hat{A}B$ இரு கூறிடப்படுகின்றது எனவும்

(4) E யில் வட்டத்திற்கு வரையப்பட்டுள்ள தொடலி நீட்டப்பட்ட AD யிற்குச் செங்குத்து எனவும் நிறுவுக.

## பாடம் : வரலாறு

01. உள்நாட்டு நீர் வலயத்திலும் வானிலும் செய்த தவறுகள் தொடர்பாக வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்ற அதிகாரம் இலங்கையில் பின்வரும் எந்நீதிமன்றத்திடம் உள்ளது?
(1) மேல் நீதிமன்றம் (2) உயர் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) நீதிவான் மன்றம்

02. நான்காம் புத்த அவையை நடத்துவதற்கு அனுசரணையளித்த அரசன் யார்?
(1) காலாசோக (2) அஜாசத்த
(3) கணிஷ்க (4) தர்மாசோக

03. வடமேற்குத் தேசவெல்லையினூடாக இந்தியப் பிரதேசங்களில் நடைபெற்ற படையெடுப்புகளும், புலப்பெயர்ச்சிகளும் பெரும்பாலும் நடைபெற்ற கணவாய்.
(1) கைபர் (2) கோமல்
(3) போலன் (4) மக்ரான்

04. மௌரிய அசோகப் பேரரசின் நிருவாக ஒழுங்கமைப்பில் தர்ம மகாமத்திரா என்ற அலுவலர்களிடம் கையளிக்கப்பட்ட பணி.
(1) இந்தியாவில் புத்தசமய முன்னேற்றத்திற்காகச் செயற்படுதல்.
(2) அரசாங்கத்திற்கு அர்த்தத்திலும் தர்மத்திலும் ஆலோசனையளித்தல்
(3) அசோகனின் தர்மத்தைப் பேரரசில் நடைமுறைப்படுத்தல்.
(4) இந்தியாவிற்குப் புறத்தே உள்ள பிரதேசங்களில் புத்தசமயத்தைப் பரப்புதல்

05. இந்தியாவிற்கு முதல் வந்த முஸ்லிம் படையெடுப்போரின் நோக்கம்
(1) வடமேற்கு, வடஇந்தியாவில் உள்ள இராச்சியங்களின் செல்வத்தை கொள்ளையடித்தல்
(2) இந்தியாவின் வர்த்தகப் பலத்தை கைப்பற்றல்.
(3) வடஇந்தியாவின் அரசியல் அதிகாரத்தைப் பெறல்.
(4) வடமேற்கு, வடஇந்தியாவில் இஸ்லாம் சமயத்தைப் பரப்புதல்

06. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலமாகத் தென்னிந்தியாவின் இந்து கலாச்சாரத்தை முஸ்லிம் ஆதிக்கத்தின் கீழ் வராமல் பாதுகாப்பதற்குப் பெரும் பணியை நிறைவேற்றியவர்.
(1) சோழர் (2) பாண்டியன்
(3) பல்லவர் (4) விஜயநகர ஆட்சியாளர்

## பாடம் : விஞ்ஞானம்

01. மின்னைக் கடத்தும் பதார்த்தம் எது?
(1) வெல்லக் கரைசல் (2) சுண்ணாம்புக் கரைசல்
(3) உப்புக் கரைசல் (4) தேன்

02. வெப்பமானி ஒன்றின் கீழ் நிலைத்த புள்ளியைக் காண்பதற்கு வெப்பமானியின் குமிழ்
(1) உருகும் பனிக்கட்டி மீது வைக்கப்படும்
(2) குளிர்ந்த நீரில் வைக்கப்படும்
(3) கொதி நீரில் வைக்கப்படும் (4) கொதிநீராவியில் வைக்கப்படும்

03. மேற்காவுகை மூலம் வெப்பம் பரிமாற்றப்படுவது
(1) திண்மங்களிலும் திரவங்களிலும் (2) வளியிலும் வெற்றிடத்திலும்
(3) திரவங்களிலும் வளியிலும் (4) திரவங்களில் மட்டும்

04. மின்னோட்டத்தை அளக்கப் பயன்படும் கருவி எது?
(1) அம்பியர் மானி (2) வோல்ட் மானி
(3) பல் மானி (4) கல்வனோமானி

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் இலக்கணத் தொடர்

#### அடுக்கிடுக்குத் தொடர்கள்.

கரிய கரிய ன– கன்னங்கரிய
பெரிய பெரிய – பென்னம் பெரிய
இவ்வாறு அடுக்குத் தொடரின் முன் மொழி விகாரம் அடைந்து வருவது அடுக்கிடுக்குத் தொடர் எனப்படும். பொருள் மிகுதிப் பாட்டைக் காட்டவே முன் மொழி இவ்வாறு விகாரம் அடைந்து வருகிறது.

1.பென்னம் பெரிய – பெரிய பெரிய
2.சின்னஞ் சிறிய – சிறிய சிறிய
3.கன்னங் கரிய – கரிய கரிய
4.நடு நடுங்கி – நடுங்கி நடுங்கி
5.வெட்ட வெளி – வெளி வெளி
6.அணிந்து அணிந்து –அண்ணணித்து
7.சிறிய சிறிய – சின்னஞ் சிறிய
8.தனி தனி – தன்னந்தனி
9.பணைத்த பணைத்த – பண்ணப்பதைத்த
10.பதைத்து பதைத்து – பதை பதைத்து

#### இணைமொழித் தொடர்கள்.

பொருட் செறிவை மிகுவிப்பதற்காக பேச்சிலும் எழுத்திலும் இணை மொழிகளை பயன்படுத்துகின்றோம். பெரும்பாலும் இணை மொழிகளுள் இரு பிரிவுகள் உண்டு.
ஒத்த பொருள் உடைய இணை மொழிகள்
உ-ம் ஏழை எளியவர், சீறிச்சினந்து
நேர் எதிரான பொருளை உடைய இணைமொழிகள்
உ-ம் ஆதி அந்தம், இன்ப துன்பம்

1. அகமும்முகமும் 3. அந்தி சந்தி 5. ஆடல் பாடல்
2. அக்கம்பக்கம் 4. அரிய பெரிய 6. ஆடிப்பாடி




**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை


## Grammar

**Complete the following paragraph using the word give in brackets to from a word that fits the blank space .**
*The first one is done for you.*

We all love to see birds in their (1)...different... (differ) range of colors. Recently a three day (2)........... (exhibit) of photographs featuring birds was held in Galle. the title of it was 'The Feathers'. The young (3)......... (photograph) who had organized it told us that he became a bird watcher quite unexpectedly. His (4)......... (curious) about birds turned into a love of bird - watching and then he had started to photograph them. the (5)........ (select) on display showed how far and wide he had traveled. His photographing of birds had made him quite (6)......... (knowledge) about the birds and their habitats.

05. சமநிலைப்படாத விசைத்தாக்கும் சந்தர்ப்பத்திற்கு உதாரணம்
(1) பொருள் மேசையின் மீது ஓய்விலிருத்தல்
(2) நூலில் இருந்து தொங்கவிட்ட பொருள் ஓய்விலிருத்தல்
(3) சாய்ந்த தளத்திலிருந்த பொருள் ஓய்விலிருக்கும் போது
(4) கிடை மேசைமீது பொருள் அசையும் போது

06. நியூட்டனின் 3ம் விதியுடன் மிகவும் பொருத்தப்பாடாயமைவது.
(1) மரத்திலிருந்து பழம் நிலத்தில் விழுதல்
(2) ஓடம் காரின் இயக்க திசை மாறுதல்
(3) கயிறு இழுத்து மரத்தில் கட்டுதல்
(4) மலையில் மேலிருந்து விழுந்து பின்னர் பந்து பின்னுதைத்தல்

07. மின் சாதனத்தின் வாற்றளவு குறிப்பது.
(1) சக்தியை உள்ளெடுக்கும் வீதம் (2) சக்தியை செலவிடும் வீதம்
(3) சக்தியை உருவாக்கும் வீதம் (4) மேற்கூறிய யாவும் பிழை

08. இயக்கப்பாட்டு சக்தியை மின்னியக்க சக்தியாக மாற்றும் உபகரணம் எது?
(1) சைக்கிள் டைனமோ (2) மின் மோட்டார்
(3) மின் குமிழ் (4) மின் கலம்

09. அந்தமில் பட்டி மூலம் சக்தி ஊடு கடத்தும் முறை அல்லாதது.
(1) அரைக்கும் ஆலை (2) தையல் பெறி
(3) கடிகாரமுள் இயங்குதல் (4) தைனமோக்களில் மின் உற்பத்தி

10. சுற்றாடலில் உள்ள இறந்த சேதனப் பொருட்களை பிரிகையுறச் செய்யும் அங்கிகளுக்கு வழங்கும் பெயர்
1. தாவர உண்ணிகள் 2. ஒட்டுண்ணிகள்
3. உற்பத்தியாக்கிகள் 4. பிரிகையாக்கிகள்

06. கடற்கரைப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு தாவரம் எது?
1. [illegible] போரா 2. ஐப்போமியா பைலேரியா
3. [illegible]கோணியா 4 நெலும்பியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தேசிய...

அதேநேரம், போர்க்குற்ற விசாரணைகள் குறித்து தாம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் நடாத்திய பேச்சுக்களின் போது, அவர்களும் உள்நாட்டு விசாரணைக்கே ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாகவும் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போர்க்குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணைகள் நிறைவடைந்துவிட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியதாக அமைச்சர் மனோகணேசன் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த அமெரிக்க செனட் சபை உறுபபினர் குழு, வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனை சந்தித்திருந்தது.

இதன் போது, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவினரால் நிறைவு செய்யப்பட்டுள்ள போர்க்குற்ற அறிக்கையானது, குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களை நேரில் அழைத்து விசாரணை செய்யப்படாமலே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அதன் அடிப்படையில் விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்றும், முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் மனோ கணேசனின் கூற்று தொடர்பாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும், அவர்கள் பதிலளிக்கவில்லை.

உள்ளக விசாரணையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சாரார் எதிர்த்து நடவடிக்கைகளை முன்னெடுத்தள்ள போது தலைமை உள்ளக விசாரணையினை ஆதரித்திருக்கும் செயதிகள் வெளியாகியுள்ளன.

யுத்தக்குற்றங்கள் குறித்து சர்வதேச பொறிமுறையே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தலைமையில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பேரணியொன்று நடைபெறுகின்றது. இந்த பேரணியில் அனந்தி சசிதரன், சி.சிறிதரன் போன்றோரும் பங்கேற்றுள்ளனர்.

இதேவேளை, போர்க்குற்றங்கள் குறித்து வடமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த இரண்டு தீர்மானங்களின் பிரதிகள், மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கும் முகமாக, தங்களிடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கயேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழ் மக்கள் நடவடிக்கைக்குழு தமிழர் தாகம் எங்கும் சர்வதேச விசாரணையை ஆதரித்து கையெழுத்துத் திரட்டும் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும் இக் கையெழுத்து வேட்டைக்கு வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பங்களிப்புச் செய்திருப்பதும் தெரியவந்துள்ளது.

## இளைஞ....

துறையால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு மீட்கப்பட்ட ஆயுதங்களுள் கைக்குணடொன்று, தன்னியக்க ரி-56 சுடுகலனுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் உட்பட மாவிலாறு காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் சுடுகல னொன்றும் கைப்பற்றப்பட்டிருப்பதாகக் காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட இருபத்தியாறு வயதான சுல்தான் முகமது இக்றாம் குறித்த தினத்தின் தனது வீட்டு வாசலில் துாங்கிக் கொண்டிருந்தபோதே சுடப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த பிரதேசத்திற்கு அருகாமையில் வசிக்கும் தமிழ் மக்களிடையேயும் நிம்மதியின்மை தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சில வருடங்களுக்கு முன்னர் சில தமிழ் இளைஞர்களுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கமானது வாள் வெட்டில் முடிந்தபோது அவ்வாள் வெட்டுக்குக் காரணமானவர் என கொல்லப்பட்ட இளைஞன் நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார் என மக்கள் தெரிவித்தனர்.

## திருமலை வளாகத்...

தற்காலிகத் தலைமையின் கீழேயே நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள தற்காலிகத் தலைமையானது திருகோணமலை வளாகத்தின் அபிவிருத்தி மற்றும் நிர்வாக முன்னேற்ற நடவடிக்கைகளில் தீர்மானங்களை எடுக்க முடியாத நிலை காணப்படுவதால் கடந்த ஒரு வருடமாக திருகோணமலை வளாகமானது அடைந்திருக்க வேண்டிய அபிவிருத்தியை எட்ட முடியாதுள்ளது. அத்துடன் அவ்வளாகத்தின் நிர்வாக நடவடிக்கை-களும் தளம்பலடைந்திருப்பதைப் பல்வேறு குறிகாட்டிகள் வெளிக்காட்டியுள்ளன.

தமிழர்களின் தலைநகரான திருகோணமலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இவ்வளாகமானது இவ்வாறானதொரு இடர் நிலையடைந்திருப்பதையொட்டி இம்மாவட்டத்தின் கல்விச் சமூகத்தின் அங்கத்தினராகிய நாம் கடும் கவலையடைந்துள்ளோம். எனவே நிரந்தரமான முதல்வரொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதற்கட்டமாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை மிகப் பணிவன்புடன் வேண்டுகின்றோம் என இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தனது வேண்டுகோளைக் கடிதம் மூலம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு தெரியப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த இரா. ஸ்ரீஞானேஸ்வரன் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் அதீத கரிசனையுடன் செற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இரா.சம்பந்தன் மற்றும் துரைரெட்ணசிங்கம் ஆகியோருக்கும் அக்கடிதத்தின் பிரதிகள் தகவலுக்காகவும் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு அவர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இலங்கைக்கு....

எனவும், இச்சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொரு மத்தியஸ்த்தத்திற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் அழைப்பு விடுக்கும் பட்சத்தில் அங்கு அரசியல் தீர்வு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் நான் செல்ல முடியும்" என்றும் நோர்வேயின் முன்னாள் சமாதானத் துாதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இவரது பணிக்காலத்தின் போதே இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டு இடைக்காலச் சமாதானம் ஏற்பட்டிருந்தது. இச்சமாதானத்தினால் தமது போரிடும் ஆற்றல் குறைவடையும் என விடுதலைப் புலிகளின் தளபதிகள் வலியுறுத்தியிருந்த போதும் அவ்வமைப்பின் தலைவர் பூகோள அரசியற் போக்கிற்கு ஏற்ப சமாதான உடன்பாட்டிற்குச் சென்றிருந்ததாக அன்றைய காலப்பகுதியில் ஊடகச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்- தக்கது.

## திருமலைக்கு....

மற்றும் சிறந்த கவிதைக்கான "சில்லையூர் செல்வராஜன் விருது" ஆகிய இரண்டு விருதுகளையும் திருகோணமலையின் மூத்த எழுத்தாளர்கள் வெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாழ்நாள் சாதனையாளர் விருதை திரு. நந்தினிசேவியர் அவர்கள் வென்றுள்ள நிலையில் ஆலங்கேணியைச் சேர்ந்த திரு. அ.கௌரிதாசன் தனது "ஒரு கவிதை எழுதிவிட..." என்ற கவிதைத் தொகுப்பிற்காகச் சிறந்த கவிதைக்கான கொடகேயின் சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதேவேளை சிறந்த தமிழ் நாவலுக்கான பரிசினை "கட்டடக்காடு" என்ற நாவலை வரைந்த ப.சசிகரன் (பசுந்திராசசி), சிறந்த சிறுகதைக்கான விருதினை "வளைவையின் மடியில்" என்ற புத்தகத்திற்காக அமரர். எம்.எச்.எம். சம்ஸ் அவர்களும், மொழிபெயர்பு நூலுக்கான விருதை சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்ட "அவன் ஒரு அபூர்வ சிறுவன்" என்ற புத்தகத்திற்காக எழுத்தாளர் மலரன்பன் அவர்களும், சிறந்த முதல் நூலுக்கான விருதினை க.கோபாலப்பிள்ளை எழுதிய "யாரிலிகள்" என்ற சிறுகதை நூலும் பெற்றுள்ளது.

## கிழக்கில்

அதி வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை இந் நடவடிக்கையைத் தொடங்கி வைக்க மட்டக்களப்பில் அதி.வணக்கத்திற்குரிய ஆயர் பொன்னையா யோசப் அவர்கள் இக் கையெழுத்து வேட்டையை உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

இதேவேளை நடைபெற்றுவரும் கையெழுத்தச் சேகரிப்புப் பணியில் வடக்கில் மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற, மாகாணசபை மற்றும் நகர, பிரதேச சபை உறுப்பினர்களும் ஏனைய சிரேட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளனர். கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேசமே..

அல்லது சர்வதேசப் பொறுப்புடைமைச் செயல்முறையொன்றின் ஊடாகவோ ஸ்ரீலங்காவில் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அத் தமிழர் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபைக்குப் பரிந்துரையொன்றையும் வழங்கியுள்ளன.

பிரித்தானிய தமிழ் கன்சர்வேடிவ்கள் (ஐக்கிய இராச்சியம்), பிரித்தானிய தமிழர் ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்), இலங்கைத் தமிழ்ச் சங்கம் (அமெரிக்கா), சர்வதேச ஈழத்தமிழர் பேரவை (கனடா- நோர்வே- பின்லாந்து- டென்மார்க்- ஸ்வீடன்- ஹாலந்து- பெல்ஜியம்- ஜெர்மனி- பிரான்சு- சுவிட்சர்லாந்து- அயர்லாந்து- இத்தாலி- அவுஸ்திரேலியா- நியூசிலாந்து-மற்றும் மொரிசியஸ்),பசுமைத் தாயகம் அறக்கட்டளை (இந்தியா) இலங்கையில் சமத்துவத்துக்கும் நிவாரணத்திற்குமான மக்கள் (அமெரிக்கா), தென்பகுதி பண்பலை வானொலி (தென்னாபிரிக்கா), சுவீடன் தமிழர் மன்றம், அனைத்துலக விவகாரங்களுக்கான அமைச்சகம் (நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்) அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தமிழர் அரசியல் நடவடிக்கைப் பேரவை (அமெரிக்கா), உலகத் தமிழர் அமைப்பு (அமெரிக்கா) ஆகிய புலம்பெயர் தமிழர் அமைப்புக்களே கூட்டாக இக் கோரிக்கையினை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்திற்கு அனுப்பவைத்துள்ளன.

## ஸ்ரீ லக்சுமி....

அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாகம் அறியத் தந்துள்ளது.

விழிப்புரை (கட்டராக்ட்) நோய்க்கான சத்திரசிகிச்சைக்கான மேலதிக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அறியத்தந்துள்ள ஆலய நிர்வாகம் இலவச கண்ணாடிகளும் அன்றைய தினம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தது.

## ஆயிரம்...

பிரதேசத்தில் நாம் 70 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றோம்.

எமது பரம்பரை குடியிருப்பு காணிகளையும் நெற் காணிகளை சுவீகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த காணியை நாம் எந்த சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்க இடமளிக்கக்கூடாது. நீதிமன்றம் சென்றாவது எமது காணிகளை மீட்டெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு காணி உரிமையாளர்களினது ஒத்துழைப்பு மிக முக்கியமானது. அத்தோடு நாம் திருகோணமலை மாவட்ட அரசியல்வாதிகளிடம் காணிப் பிரச்சினை சம்பந்தமான ஆவணங்களை வழங்கி குடியிருப்பு காணிகளையும் நெற்காணிகளையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப் புறங்களில் பல ஆயிரம் ஏக்கர்கள் இவ்வாறு சுவீகரிக்கப்படும் திட்டம் முன்னை அரசின் கீழ் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....



அடுத்து 9 April 1942 அன்றும் ஜப்பான் திருக்கோணமலைத் தளத்தினை நோக்கி வந்தது. அவ்வளவு எளிதாக தாக்கி அழிக்க முடியவில்லை. அதாவது பேர்ல் துறைமுகம் தாக்கப்பட்டு 4 மாதங்களுக்குப் பிறகு இங்கே அந்த தாக்குதல் ஜப்பானால் மேற்கொள்ளப்-பட்டது. இந்த தாக்குதலால் எழுந்தது தான் "திருக்கோணமலை துவரங்காடு-பிரித்தானிய நினைவாலயம்". அதுபற்றி அறிந்து கொள்ள http://www.geevanathy.com/2009/04/blog-post_20.html என்கிற இந்த வலைத்தளத்தில் பார்வையிடலாம். இந்த ஜப்பானின் இலங்கைத் துறைமுகம் மீதான தாக்குதல் தொடர்பில் அன்றைய பிரித்தானிய பிரதமர் Winston Churchill சொன்ன வசனம் ஒன்று போதும் இலங்கையின் பூகோள முக்கியத்துவத்தை அறிய, அதன் ஆங்கில வடிவத்தை அப்படியே தருகிறேன் Prime Minister Winston Churchill said-

The most dangerous moment of the War, and the one which caused me the greatest alarm, was when the Japanese Fleet was heading for Ceylon and the naval base there. The capture of Ceylon, the consequent control of the Indian Ocean, and the possibility at the same time of a German conquest of Egypt would have closed the ring and the future would have been black. — From a conversation at the British Embassy, Washington, D.C. இப்பொழுதும் அந்த பூகோள முக்கியத்துவம் இலங்கைக்கு குறையவே இல்லை. அதனைத்தான் 2009 யுத்தம் சுட்டிக் காட்டியது என்றாலும் பொய்யில்லை.

அவை அப்படியே நிற்க, இனி ஜப்பானின் கண்ணீருக்குள் நுழைவோம். August 6 1945 இல் அமெரிக்காவால் ஹிரோஷிமா நகர் மீது வீசப்பட்ட முதலாவது அணுக்குண்டானது Little Boy என்கிற பெயருடைய uranium gun-type atomic bomb வகையைச் சேர்ந்தது. மூன்று நாட்கள் கழித்து August 9 1945 அன்று நாகசாஹி நகர் மீது வீசப்பட்ட அணுக்குண்டு Fat Man என்ற பெயருடையது. plutonium implosion-type bomb வகையைச் சேர்ந்தது. சரி. இந்த குண்டுகளை அமெரிக்காதான் கொண்டுபோய் ஜப்பானின் தலையில் போட்டது, ஆனால், அதனை தாயாரித்தது யார்? அதன் தயாரிப்பில் யாருக்கெல்லாம் பங்குண்டு? என்று கேட்டால் Little Boy, Fat Man ஆகிய குண்டுகள் தயாரிக்க 1942-1946 ஆண்டு வரை அமெரிக்காவின் Tennessee மாநிலத்தில் தலைமையகமாகக் கொண்டு "The Manhattan Project" என்கிற செயற்றிட்டம் அணு பரிசோதனைக்காக தொடங்கப்பட்டது. இதில் அமேரிக்கா மட்டுமா பங்கு கொண்டது? இல்லை, இதில் அமெரிக்காவுடன் கனடாவும், பிரித்தானியாவும் சேர்ந்து மூன்று நாடுகள் பங்கு கொண்டன. இந்த நாடுகளின் கைங்கரியத்தாலேதான் அணு ஆய்வு செய்து செறிவூட்டப்-பட்டது. அணுகுண்டுகள் தயார் செய்யப்பட்டன. New Mexico மாநிலத்தில் சத்தமின்றி பரிசோதனை-யையும் செய்துகொண்டன. காலம் வரும் வரை பார்த்திருந்து ஜப்பானின் தலையிலும் போட்டன. கத்தியால் குத்தியவனும் கொலைகாரன்தான். கத்தி எடுத்துக் கொடுத்தவனும் கொலைகாரன் தான்.

இந்த செயற்றிட்டத்தால் வரலாற்றில் முதன்முதலாக அணுக்குண்டு தாயாரித்து ஆயுதமாகப் பயன்படுத்திய பெருமை அமெரிக்காவையே சாரும், என்றாலும் இது அமேரிக்கா ஏனைய சில நாடுகளிடம் இருந்து களவாடிக் கொண்டதுதான் உண்மை. ஆம், அப்பொழுது அணு தொடர்பில் ஆய்வுகள் செய்துகொண்டிருந்த இரசியா, ஜெர்மன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளிடம் இருந்துதான் களவாடி பெயரை தான் வைத்துக் கொண்டது.

இந்த திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்த தொகை 1945ம் ஆண்டின் பெறுமதிப்படி $1.89 பில்லியன்கள். அதுவே இன்றைய 2015 ம் ஆண்டின் பெறுமதியில் $24.8 பில்லியன்கள் ஆகும். இப்படி செலவு செய்து அவர்கள் இரண்டு நகரங்களை அழித்ததும் மட்டுமல்லாமல், பல உயிர்களை காவுகொண்டதுதான் மிச்சம். ஆனாலும் தம் உலகநாயகன் கனவை 129,000-246,000 வரையான மக்களை கொன்று குவித்தும், எரிகாயங்கள், அணுக்கதிர் வீச்சுக்கள், இடுபாடுகளில் சிக்கி என்று மிக ஏராளமானவர்களை காயப் படுத்தியும்தான் அமேரிக்கா நிறைவேற்றிக் கொண்டது என்பதுதான் உண்மை. இதிலிருந்து உலக நாடுகளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது, தமது சுயநலப் போக்கிற்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறார்கள் என்று, பல நாடுகள் ஒதுங்கியும் கொண்டன.

இன்றும் ஜப்பானில் அந்த அணுக்கதிர்களின் தாக்கம் நிலவுவதாக சொல்கிறார்கள். குழந்தைப் பிறப்பு-களில் குறைபாடு, விவசாயத்தில் குறைபாடு, அணுக்கதிர் வீச்சால் உடல், மன வியாதிகள் என்று இன்றும் அவர்கள் தாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்கா-வுடன் செல்லம் கொஞ்சிக் கொண்டும் இருக்கிறார்கள்.


2009 இல் இலங்கையில் இறந்ததும் மனிதம்தான், 1945 இல் அணுக்-குண்டால் ஜப்பானில் இறந்ததும் மனிதம்தான்.





# லக்ஷ்மி நாராயணன் – கொடியேற்றம்

கிழக்கிலங்கையில் வரலாற்றச் சிறப்புமிக்க திருகோணமலை லக்ஷ்மி நாராயணன் கோவிலின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (06.09.2015) அன்று கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகியது.

நாராயணப் பெருமான் கொடி, குடை, ஆலவட்டம் போன்றவற்றுடன் வீதி உலா வந்து பின்னர் பிரதம குருக்களால் கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்றது. அவ்விழாவின் போது அடியார்கள் பலர் கலந்து கொண்டு பெருமானின் இஷ்ட சித்திகளை பெற்றனர்.



படங்கள் - கதிரவன்





# பரிசளிப்பு விழா

திருகோணமலை சிவநயனி நற்பணி மன்றத்தின் பரிசளிப்பு விழாவும், மன்றத்தின் உத்தியோகப்பூர்வ அங்குராப்பணம் நிகழ்வும் 08.09.2015 செவ்வாய்கிழமை அன்று மாலை திருக்கோணேஸ்வர ஆலயத்தில் நடைபெற்றபோது மன்றத்தின் தலைவர் சி.ராம் கார்த்தீவன் தலைமையுரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பல நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெற்றன. தொடர்ந்து அந் நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.









# கந்தன் தேர்த் திருவிழா

கிழக்கிலங்கையில் வரலாற்றச் சிறப்புமிக்க திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி இறுதித் திருவிழாவான இரதோற்சவம் 11.09.2015 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம்பெற்றது பக்தர்கள் சிதறு தேங்காய் உடைத்து பின்னர் கந்தனின் இரதம் அடியார்களால் இழுக்கப்பட்டது.. இடையிடையே சிறார்களின் நடன நிகழ்வுகளும், மிருதங்க நாதஸ்வர இசைளும் இடம்பெற இரதோற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. பின்னர் விசேட அர்ச்சனைகள் இடம்பெற்றன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## இடைக்கால பயிற்சியாளராக ஜெரோம்

ஜெரோம் ஜெயரத்ன உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்னதாக இலங்கை அணிக்கு தலைமைப் பயிற்சியாளராக இருந்த மாவன் தனது பதவியை அண்மையில் இராஜிநாமா செய்திருந்தார்.

சொந்த மண்ணில் இலங்கை அணி தொடர்ந்து பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகளிடம் டெஸ்ட் தொடரை இழந்திருந்தமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அடுத்ததாக மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இதனையடுத்தே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜெரோம் ஜெயரத்னவின் தெரிவு இடம்பெற்றுள்ளது.

## குறி பார்த்து சுடுதலில் சம்பியனானது கடற்படை

குறிபார்த்துச் சுடுதல் சம்பியன்ஸிப் தொடரில், பகிரங்கப் பிரிவில் இடம்பெற்ற போட்டிகளில், கடற்படை பெண்கள் அணி ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இப்போட்டிகள், ஹந்தானையிலுள்ள மத்திய மலைநாட்டு சுடுதல் கழகத்தின் சுடும் அரங்கில் இடம்பெற்றன.

பகிரங்கப் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்வதற்காக, கடற்படையின் பெண்கள் அணியைச் சேர்ந்த வீராங்கனைகளான டபிள்யூ.ஜி.எஸ் பிரியதர்'னி, யு.எஸ் றொட்ரிகோ, டபிள்யூ.எம்.என்.ஆர் குமாரி ஆகியோர் அடங்கிய குழு, அனைத்து ஆண், பெண் அணிகளையும் தோற்கடித்திருந்தனர். இலங்கையின் துப்பாக்கிச் சூடு போட்டிகளின் வரலாற்றில், இது முதன் முறையாக இடம்பெற்றிருந்தது. தேசிய றை.'.பிள் சங்கத்துடன் இணைந்து, மத்திய நாட்டு சுடுதல் கழகத்தினால் இத்தொடர் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றிருந்தது.



## சச்சினையே முந்தும் அஸ்வின்

இந்திய சாதனையாளர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் வீரேந்திர ஷேவாக்கை நெருங்கி விட்டார் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின். இலங்கைக்கு எதிரான தொடரில், அஸ்வின் தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்தத் தொடரில் அவர் 21 விக்கெட்களைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
சச்சின் டெண்டுல்கர் 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 5 முறை தொடர் நாயகன் விருதை வென்றுள்ளார். அதேபோல 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஷேவாக்கும் 5 முறை தொடர் நாயகன் விருதை வென்றுள்ளார். இந்த நிலையில் 28 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள அஸ்வின் நேற்று 4வது முறையாக தொடர் நாயகன் விருதை வென்று அசத்தி விட்டார். இன்னும் ஒரு தொடர் நாயகன் விருதை வென்றால் அவர் சச்சின், ஷேவாக் சாதனையை சமன் செய்வார்.





## அன்டி மரே அதிர்ச்சித் தோல்வி




அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் இருந்து பிரித்தானியாவின் முன்னணி வீரர் அன்டி மரே வெளியேற்றப்பட்டுள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஆடவருக்கான ஒன்றையர் பிரிவின் நான்காம் சுற்றுப் போட்டியில் அன்டி மரேயை, தென்னாபிரிக்காவின் கெவின் அண்டன் வெற்றிகொண்டார். இதன்பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் முதல் முறையாக அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் ஒன்றில் காலிறுதிக்கு முன்னதாக அன்டி மரே தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

இந்தப் போட்டி நான்கு மணித்தியாலங்களும் 18 நிமிடங்களும் நீடித்ததுடன் முதல் முறையாக க்ரான்ஸ்லாம் தொடர் ஒன்றின் காலிறுதிக்கு கெவின் அண்டசன் முன்னேறியுள்ளார்.

## அக்காவை தோற்கடித்து தங்கை



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்குள் நுழைந்துள்ளார் செரீனா வில்லியம்ஸ். கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியின் காலிறுதியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சகோதரிகளான செரீனா மற்றும் வீனஸ் வில்லியம்ஸ் மோதினர்.

இதன் முதல்செட்டை 6–2 என்ற கணக்கில் செரீனாவும், 2-வது செட்டை 6-1 என்ற கணக்கில் வீனசும் வென்றனர்.

இந்நிலையில் 3-வது செட்டை 6-3 என்ற கணக்கில் செரீனா வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார். மற்றொரு காலிறுதி போட்டியில் இத்தாலியை சேர்ந்த ராபர்ட்டா வின்சி 6–3, 5–7, 6–4 என்ற கணக்கில் கிறிஸ்டியானாவை (பிரான்ஸ்) வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதியானார்.

## லண்டன் நடிகையுடன் இந்திய வீரர் நெருக்கம்



.இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரராக இருந்த யுவராஜ் சிங் லண்டன் நடிகை ஒருவருடன் நெருக்கமாக இருப்பதாக தகவல் பரவியுள்ளது. 2011ம் ஆண்டு இந்திய அணி உலகக்கிண்ணம் வெல்ல காரணமாக இருந்த யுவராஜ், கடைசியாக, 2013ம் ஆண்டு தென்ஆபிரிக்காவிற்கு எதிரான போட்டியில் விளையாடினார். மோசமான பார்ம் காரணமாக அதன் பிறகு இந்திய அணியில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இந்திய அணியில் இருந்த போது அடிக்கடி பல்வேறு நடிகைகளுடன் இணைத்து பரபரப்பாக பேசப்பட்டார். இந்நிலையில் லண்டன் நடிகை ஹசல் கீச் (28) என்பவருடம் அவர் நெருக்கமாக இருப்பதாகவும், இருவரும் பல்வேறு இடங்களுக்கும் ஒன்றாக சென்று வருவதாகவும் கூறப்படுகிறது. இவர் இந்தியில் வசூலை வாரிக் குவித்த பாடிகார்டு படத்திலும், தமிழில் பில்லா படத்திலும் நடித்துள்ளார்.

## ஷிகர் தவான் ஏ அணியின் தலைவரானார்

வங்கதேசத்துக்கு எதிரான இந்திய ஏ அணியில் மூன்று தமிழ்நாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். வங்கதேசத்துக்கு எதிரான 3 நாள் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான இந்தியா ஏ கிரிக்கெட் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செப்டம்பர் 16, 18, 20 ஆகிய திகதிகளில் ஒருநாள் போட்டிகளும் செப்டம்பர் 27-29 வரை மூன்று நாள் போட்டியும் நடைபெறுகின்றன. 3 நாள் அணியில் அபினவ் முகுந்த், பாபா அபரஜித், விஜய் சங்கர் என மூன்று தமிழ்நாட்டு வீரர்கள் இடம்பிடித்துள்ளார்கள். ஆனால் ஒருநாள் அணியில் ஒரு தமிழ்நாட்டு வீரருக்கும் இடம் அளிக்கப்படவில்லை. மேலும் 3 நாள் அணிக்கு ஷீகர் தவான் அணித்தலைவராகவும், ஒருநாள் அணிக்கு உன்முக்த் சந்த் அணித்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 4 ஓட்டங்களால் அதிரடி வெற்றி



குமார் சங்ககாரவின் அதிரடியில் நொட்டின் ஹாம்ஷயர் அணிக்கு எதிரான 2 ஆவது அரையிறுதிப் போட்டியில் சரே அணி 4 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

ரோயல் லண்டன் கிண்ணத்திற்கான 2வது அரையிறுதிப் போட்டி இங்கிலாந்தின் கெனின்டன் ஓவல் விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இங்கிலாந்தின் பிராந்திய அணிகளான நொட்டின் ஹாம்ஷயர் மற்றும் சரே அணிகள் இப் போட்டியில் ஒன்றையொன்று சந்தித்தன.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சரே அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களைப்பெற்றது. சரே அணி சார்பில் அதிரடியாக விளையாடிய இலங்கையின் ஓய்வுபெற்ற நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார 13 பவுண்டரி மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 138 பந்துகளில் 166 ஓட்டங்களைப் பெற்றார்.

## இடையூறு செய்ததால் ஆட்டமிழப்பு

26 ஆவது ஓவரை அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிச்செல் ஸ்டார்க் வீசிய போது, அதை பென் ஸ்டோக்ஸ் எதிர்கொண்டார். 4 ஆவது பந்தை நேராக அடித்து விட்டு சில அடி தூரம் ஓடினார். அதற்குள் பந்து வீசிய மிச்செல் ஸ்டார்க்கே பிடித்தார். ஸ்டோக்சை ரன் அவுட் செய்வதற்காக ஸ்டம்பை நோக்கி பந்தை எறிந்தார். உடனே ஸ்டம்பை நெருங்கிய சமயத்தில், இடது கையை குறுக்காக நீட்ட பந்து அவரது கையில் பட்டு விழுந்தது. பந்தை வேண்டுமென்றே துடுப்பாட்ட வீரர் தடுத்ததால் அவர் ஆட்டமிழந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

## வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பங்கு: கிழக்கில் பங்களிப்பில்லை




தமிழர்களுக்கு இறுதி யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட அநீதி தொடர்பான விசாரணை-களைச் செய்யும் பொறிமுறை- யானது உள்ளகப் பொறிமுறையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி முன்னெடுக்கப் -பட்டுள்ள கையெழுத்துப் போராட்டமானது கிழக்கிலும் மக்களின் பங்களிப்புடன் நிகழ்ந்துவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை திருகோணமலை சிவன் கோவிலின் அருகில் ஆரம்பிக்கப்பட்டதுடன் கிழக்கில் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்படத் தொடங்கியது அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பிலும் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலையின் முன்னைநாள் ஆயர் 17




1000 ஏக்கர்களை

## சுவீகரிக்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த நடவடிக்கை

திருகோணமலை தோப்பூர் பிரதேசத்தில் பௌத்தவிகாரைக்கு சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்த சூட்சுமமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தோப்பூர் மக்கள் சந்தேகம் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே காணி அபகரிப்பு வெளிப்படையாக நடைபெற இருந்த போது அந்நடவடிக்கைகளை நிறுத்தி அதனை எதிர்த்து வீதிப் போராட்டங்களை மேற்கொண்ட மக்கள் தற்போது தமது காணிகளைக் கைப்பற்றச் சூட்சுமமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அச்சம் கொண்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கடந்த 10ம் திகதி விசெட மக்கள் கூட்டமொன்று கூட்டப்பட்ட போதோ மக்கள் இவ்வச்சத்தை வெளியிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த காணி உரிமையாளர் ஒருவர், "செல்வநகர் 17

## இலங்கைக்கு மீண்டும் எரிக் சொல்ஹெய்ம்?


இறுதியாக இலங்கைக்கான சர்வதேசச் சமாதானத் தூதுவராகச் செயற்பட்ட நோர்வேஜிய அரசப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஸ்ரீலங்கா அரசிற்கு உதவத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

தற்போதைய சூழலில் இலங்கையில் நிரந்தரச் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் ஸ்ரீலங்கா அரசிற்குத் தான் உதவ முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அரசின் முயற்சிகள் யாவும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இயங்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ள அவர் அவ்வாறானதொரு மத்தியஸ்தராகவே தான் செயற்பட விரும்புவதாகவும் செவ்வியுள்ளார்.

நோர்வே நாட்டு வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தற்போது இலங்கை அதன் சொந்த கடின உழைப்பு மூலம் தன்னுடைய சிக்கல்களை தீர்ப்பதற்குப் பொன்னான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், சர்வதேச சமூகம் அதற்குச் சிறந்த மத்தியஸ்தராக இருக்க வேண்டும் 17



-தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதற்கான அனைத்து அடையாளங்களையும் தம்மகத்தே கொண்டுள்ளனர். ஆதலால் அவர்கள் தனித் தேசத்திற்கு உரித்துடையவர்கள்-

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"

ஸ்ரீலக்சுமி நாராயணர் ஆலய நிர்வாகம் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவுடன் நடாத்தும்


## இலவச கண்சிகிச்சை முகாம்

ஸ்ரீ லட்சுமி நாராயணர் கோவில் நிர்வாகத்தினர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவுடன் இலவச கண் சிகிச்சை முகாமொன்றை எதிர்வரும் 26ம் திகதி நடாத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வறிய மக்களுக்கான கண் சிகிச்சை முகாமாக இம்முகாம் அமையவிருப்பதுடன் கண் தொடர்பான அனைத்துச் சிகிச்சைகளுக்குமான ஏற்பாடுகளும் இக்கண்சிகிச்சை முகாம் ஊடாக ஏற்பா செய்யப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

திருகோணமலையின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் கண் தொடர்பாகப் பிரச்சனையுள்ள மக்கள் இம் முகாமிற்கு வருகை தந்து இலவச வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள முடிவதுடன் தேவையானவர்களுக்கு மேலதிக சிகிச்சை வழங்குவதற்கு வேறு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு 17

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு இதுதானா?




முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 12.09.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org